# ஆத்மஜோதி

ஆடி - 1982



பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே
—சுத்தானந்தர்

ஆசிரியர்: நா. முத்தையா

ஜோதி: 34 — ஆடி — (17-7-82) — சுடர்: - 9


## பொருளடக்கம்


| | |
|---|---|
| திருவடியைச் சென்னி வைப்பாம் | — 349 |
| பகவான் பாபாவின் அருள்வாக்கு | — 350 |
| பகவான் சத்திய சாயி பாபாவின் வருகை ஒரு திருப்பு மையம் | — 351 |
| தர்மமே குறிக்கோள் | — 357 |
| பகவானிடம் கேள்வியும்-பதிலும் | — 362 |
| பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா | — 366 |
| நல்லவனுக இரு-நல்லவையைக் காண் | — 372 |
| இரண்டில் இரண்டுகள் | — 374 |
| திருக் கழுக் குன்றம் | — 377 |
| பூஜ்யஸ்ரீ ஹித்த நரஹரி குருஜி அருளாசி | — 384 |
| மனிதரின் உணவு மாமிசமா மரக்கறியா? | — 385 |
| திருமுறைக் கதைகள்-2 | — 388 |
| பிறவிப்பயன் | — 395 |



## ஆத்மஜோதி சந்தாவில்

35ம் ஆண்டு தொடக்கம் நிகழ இருக்கும் மாற்றம்

இலங்கை வருடச் சந்தா— 25 ரூபா
,, ஆயுள் சந்தா— 500 ரூபா
இந்தியா வருடச் சந்தா— 25 ரூபா (இந்திய ரூபாய்)
,, ஆயுள் சந்தா— 500 ரூபா ( ,, ,, )
சிங்கப்பூர்-மலேசியா-இந்துனேசியா
வருடச் சந்தா— 10 வெள்ளி
ஆயுள் சந்தா— 200 வெள்ளி

இச்சந்தா 1982 கார்த்திகை மாதம் தொடக்கம் அமுல் நடத்தப்படும்.

ஆத்மஜோதி நிலையம்
நாவலப்பிட்டி — ஸ்ரீ லங்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவடியைச் சென்னிவைப்பாம்!

திருநிறையும் பங்களூர்க் கொருமுடியா யுற்ற திருபுட்டபர்த்தி
அருணிறையும் பதியாக அமரர்பதிகீழாக அவனியுள்ளோர்
பெருநலனும் இறையொளியும் பேரறிவும் பெருவாழ்வும் பெற்றேயோங்கத்
திருவவ தாரஞ்செய்த பாபாநின் திருவடியைச் சென்னிவைப்பாம்.

சத்தியமே தழைத்தோங்கத் தர்மநெறி பொலிவடையச் சாந்த மன்பு
எத்திசையு மொளிகால இன்னுரைகள் பலபரப்பி எம்மை ஊக்கிச்
சத்திய நாராயணனுய்ச் சகல புவனமுமொன்றுந் தன்மை காட்டிப்
பத்திசெயு மடியார்கள் பதைப்பகல எடுத்த திருப்பாதம் போற்றி.

துன்புற்றே யுனை அடைந்தோர் துயரமெலாந் துகளாக்கித் தூயநல்ல
இன்புற்றே யவர்வாழ நின்னுடைய திருவருளி னியல்பு காட்டி
மன்பதைக்கோர் மாமருந்தாய் உயிர்த்துணையாய் மணிவிளக்காய் வயங்கா நின்ற
நன்புத்தேள் பாபா நின் நளினமலர்த் திருவடியெந்நாளும் போற்றி.

திருநீறு சிவலிங்கம் மணிமாலை முதலான செம்மை மிக்க
கருநிறு திரவியங்கள் கருதுமள வதுதனிலே கையிற் காட்டி
ஒருநூறு பவமெல்லாம் ஒருகணத்துள் மாய்ந்தொழிய உயர்வுநல்கிச்
செருநிறும் படியாகத் திருவருள் செய் பாபாநின் திருத்தாள் போற்றி.

ஆதவனைக் கண்டபனி யகல்வதுபோல் உனையடைந்த அடியார் தங்கள்
தீதகல நலம்பெருகச் சிந்தையிருள் கடிதோடச் செம்மை செய்து
ஓதவரும் பொருளுணர்த்தி உய்யுநெறி காட்டியவுன் உயர்வு நோக்கி
மாதவரும் மலர்தூவி வந்தனைசெய் பாபாநின் மலர்த்தாள் போற்றி.

சிவனென்பார் மாலென்பார் செங்கரத்தில் வேல்தாங்கும் சேய்தான் என்பார்
பவமகல வந்தவருட் குருஎன்பார் பாரினிடை பலவாண்டாகத்
தவநிலையிற் சமாதிபெற்ற சீரடிபாபாவினது சனன மென்பார்
எவருமினி யுவமையிலை என்றேத்தும் பாபாநின் எழிற்றுள் போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் பாபாவின் அருள்வாக்கு

பக்தி என்பது வியாழக்கிழமை மாலை நேரங்களில் நீங்கள் பஜனை செய்வதற்குக் கூடும் பொழுது மாத்திரம் அணிந்து கொண்டு பஜனை முடிந்ததும் கழற்றி ஓரிடத்தில் வைக்கும் உடை போன்றதல்ல. அது பெற்றோருக்கும், குருவுக்கும், முதியோருக்கும், ஏனையோருக்கும், மரியாதை செலுத்துந் தன்மையையும், பணிவையும் வளர்க்கக்கூடியதாக இருக்கவேண்டும். பக்தி என்பது மனத்தில் எப்பொழுதும் இருக்கின்ற மனோபாவமாகும்.

* * * *

நீங்கள் உங்களுக்குள்ளேயோ மற்றவர்களோடு கூடியோ எந்தக் கருமத்தைச் செய்தாலும், இறைவன் சர்வவியாபகமாய் இருக்கின்றார் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு செய்ய வேண்டும். அவர் எல்லாவற்றையும் அறிந்து கொண்டிருக்கிறார். நீங்கள் எவைகளைப் பேசும் பொழுதும், நீங்கள் சொல்லும் ஒவ்வொரு சொல்லையும் இறைவன் கேட்டுக்கொண்டிருக்கிறார் என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும். நீங்கள் எதைப்பேசினாலும் உண்மைஎது? பொய் எது? என்பதை ஆராய்ந்து எப்பொழுதும் உண்மையையே பேசவேண்டும். நீங்கள் எதைச் செய்தாலும், சரிஎது? பிழை எது? என்பதை ஆராய்ந்து சரியானதையே செய்யவேண்டும்.

* * * *

இறைவனை உங்களுடைய இதயத்தில் இருத்திவிட்டீர்களானால் நீங்கள் கடவுளை எங்கும் காணலாம். உலகத்தில் காணப்படும் பல்வேறு வகைப்பொருட்களிலும்கூடக் காணலாம். நீங்கள் விழிப்பாய் இருக்கும் காலங்களில் ஒரு இமைப்பொழுதையாவது பயனற்ற வார்த்தைகளைப் பேசுவதிலும், வீண் புழுகுகளிலும், தன்னையே குறைத்துக்கொள்ளும்விளையாட்டுக்களிலும்வீணாக்கக் கூடாது. சாக்காடு உங்களைப் பின் தொடருகிறது. அது எந்நேரமும் உங்களை வீழ்த்திக் கவர்ந்து கொண்டுபோய்விடும். உயிருடன் வாழும்பொழுதே நல்ல கருமங்களைச் செய்யுங்கள். மென்மையாகவும், இனிமையாகவும் பேசுங்கள். மற்றவரை நிந்திக்காதீர். தீங்கு விளைக்காதீர். தேவையானவர்களுக்குச் சேவை செய்யுங்கள். இறைவனின் திருஉருவத்தை உங்களுடைய மனக்கண்ணில் எப்போதும் நிறுத்திவையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பகவான்

## சத்திய சாயி பாபாவின் வருகை

# ஒரு திருப்பு மையம்

(ஆசிரியர்)

இதிகாச காவிய வரலாற்றின்படி இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த பெரியார்களுள் இராமபிரான் முதலிடம் பெறுகின்ருர். தருமர் செய்த இராசசூய யாகத்துக்குப் பொருள் தேடி வந்த காலத்தில் அருச்சுனன் ஈழத்திற்கும் வந்து இரத்தினங்கள் பெற்றுச் சென்ருன் என்று வியாச பாரதம் கூறுகின்றது. 2500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த புத்த பெருமான் இலங்கைக்கு மும்முறை வந்தார் என்று புத்தபெருமானுடைய வரலாறு கூறுகின்றது. தர்ம அசோகச்சக்கரவர்த்தியினுடைய காலத்திலே இலங்கைக்கு அவருடைய மகனை மிகுந்தன் என்ற புத்தகுரு புத்தசமயத்தைக் கொண்டு வந்தார் என்று மகாவம்சம் கூறுகின்றது. மிகுந்தனின் தங்கையான சங்கமித்தை என்னும் பிக்குணி மிகுந்தனைத் தொடர்ந்து வந்து ஈழத்தில் பௌத்த சமயத்தைப் பரப்பிஞர். இவர் புத்தபெருமான் ஞானம் பெற்ற வெள்ளரச மரத்தின் கிளையைக் கொண்டுவந்து அநுராதபுரத்திலே நாட்டிஞர். அவ் வெள்ளரச மரம் இன்றும் இச்செய்தியை நினைவூட்டிக் கொண்டிருக்கிறது.

முருகப் பெருமான் சூரபத்மாவைக் கொல்வதற்கு யுத்தம் செய்யவேண்டி ஏமகூடம் என்ற இடத்தில் பாசறை அமைத்தார். அந்த இடம் தான் ஸ்ரீலங்கா என்று சொல்லப்படுகிறது. புராண காலத்தின்படி முதன் முதல் இலங்கையில் காலடி வைத்த பெரியவர் ஸ்ரீ முருகப்பெருமானுவர்.

சம்பந்தரும் சுந்தரரும் கேதீச்சரத்தையும் கோணேச்சரத்தையும் பாடியுள்ளார்கள். அவர்கள் இந்நாட்டிற்கு வரவில்லை, ஆனல் ஞானதிருஷ்டியினல் உள்ளதை உள்ளவாறே பாடியுள்ளார்கள். பகவான்ஸ்ரீசத்தியபாபா அவர்கள் இன்னும் ஈழத்தில் காலடி எடுத்து வைக்கவில்லை, ஆனல் அவருக்கோ ஈழத்தில் பல லட்சக்கணக்கான பக்தர்கள் இருக்கிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருசிலர் இந்தியா சென்று சுவாமியைத் தரிசனை செய்து திரும்பியுள்ளார்கள். பகவானே சூக்குமத்தில் எப்பொழுதும் தனது பக்தர்களுடன் இருக்கின்றார். இதனைப் பல பக்தர் களும் உணர்ந்துள்ளார்கள். பகவானும் பல பக்தர்களுக்கு சூசகமாகவும் வெளிப்படையாகவும் கூறியுள்ளார்கள்.

"நாமிருக்கப் பயம் ஏன்" என்பது பகவானுடைய ஆத்ம மொழி. இதனை உணர்ந்து பயன் பெற்றவர்கள் எத்தனையோ பேர். பகவானுடைய பக்தர்களிற் பலர் தமது அனுபவங் களைக் கூறுதற்கு வாய்திறந்த உடனேயே பகவான் எல்லாம் தெரியுமே என்று கூறி சாட்சியமும் வைத்துவிடுகின்றார்கள். இதனால் பகவான் எப்பொழுதும் தம்முடனிருப்பதைப் பக் தர்கள் இலகுவில் உணர்ந்துவிடுகின்றார்கள்.

இறைவன் எங்குமுள்ளான் என்பதை எல்லாரும் அறிந் திருந்தாலும் இறைவனுடைய இருப்பை உணர்ந்தவர்கள் மிகச்சிலரே. பகவானுடன் சம்பந்தம் வைத்துக் கொண்ட வர்கள், இறைவனை ஊனக்கண்ணாலும் பார்க்கும் பாக்கியம் பெற்றுவிடுகின்றனர். இறை உணர்வு பெற்றவர்கள் இறை வன் தம்முடனேயே எப்பொழுதும் இருப்பதை உணர்கின் கிறார்கள். அதனால் தீய நினைவுகளுக்கு அவர்கள் ஆளாவ தில்லை.

இலங்கையில் தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள் என்ற மூன்று சமூகத்தினரும் இந்துக்கள், பௌத்தர்கள், இஸ்லாமி யர்கள், கிறிஸ்தவர்கள் என்ற நான்கு சமயத்தினரும் வாழ் கின்றார்கள். பகவான் சத்திய சாயி பாபாவின் பக்தர்களாக இந்த மூன்று சமூகத்தினரும், நான்கு சமயத்தினரும் விளங்குகின்றார்கள். இதனால் பகவான் சாதிசமயங் கடந்த பரம்பொருளாகி விருகின்றார். இலங்கையில் இன ஒற்றுமை ஏற்படுத்த வேண்டும் என்று நமது ஜனாதிபதி அவர்கள் அல் லும் பகலும் முயன்று வருகின்றார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் பகவானை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அழைத்திருப்பது சாலப் பொருத்த மானதே.

அவதார புருஷர்களை அறிந்துகொள்வது அரிதான காரி யம். எல்லையற்ற அகண்டவஸ்து எல்லைக்குட்பட்ட கண்டத் துள் அடங்கியிருப்பதற்கு ஒப்பாகும் அவர்களது வாழ்க்கை. இத்தகைய மெய்ஞ்ஞானிகளால் தான் காயனை அகாயனுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும்; கண்டனை அகண்டனுக்க முடியும்; பேயனைப் பிரம்மனுக்க முடியும்.

ஸ்ரீ இராமபிரான் இவ்வுலகில் அவதரித்த போது, ஏழு ரிஷிகள் மாத்திரமே அவர் ஈசுவராவதார மென்பதைத் தெரிந்து கொண்டிருந்தனர். எனவே, இவ்வுலகில் எப்போது ஈசுவரன் வந்த போதிலும் சரியே, சிலர் மட்டுமே அவனுடைய தெய்வீக சுபாவத்தைத் தெரிந்து கொள்வர். நாம் வாழும் யுகம் கலியுகமானுலும், உலகத்தில் பலர் பகவான் சத்திய சாயி பாபாவை அவதார புருஷர் என்று உணர்ந்து போற்றத் தலைப்பட்டுள்ளார்கள். கலியுகம் ஒன்றில்தான் இறைவனை மனம் உருகி ஒருமுறை அழைத்தால் உடனே ஓடோடியும் வந்து அருள்புரிகின்ருன்.

தீபம் தன்னைச் சுற்றியுள்ள பொருள்களை விளக்கிக் காட்டுமாயினும், அதனடியில் எப்போதும் இருட்டாகத்தான் இருக்கும். அதுபோல, அவதார புருஷருக்கு வெகு சமீபத்தில் இருப்பவர்கள் அவரைத் தெரிந்து கொள்வதில்லை. தூரத்திலுள்ளவர்கள் அவ்வவதார புருஷருடைய ஆத்ம ஜோதியாலும், அசாதாரணமான சக்தியாலும் மனங்கனிந்து இன்பமுறுகின்றனர். இதேபோல் தான் இன்று பகவானை அவருடைய அவதாரம் நிகழ்ந்த இடத்தில் உணர்ந்தவர்களைக் காட்டிலும் ஈழத்தில் உணர்ந்தவர்கள் அனேகர் என்று கூறமுடியும். ஒருவன் ஒரு பசுவின் கொம்பு, கால், வால், மடி இவைகளில் ஒன்றைத் தொடுவதாக வைத்துக்கொள்வோம். இப்படித் தொடுவது அந்தப் பசுவைத் தொடுவதாகாதா? மானிடர்களான நமக்குப் பசுவினிடத்து முக்கியமானது அதன் மடியிலிருந்து வரும் பாலே. திவ்வியப் பிரேமையாகிற பாலானது நமக்கு ஈசுவராவதாரத்தினிடமிருந்து பெருகுகின்றது.

லீலையில் நான்குவிதம். அவை: ஈசுவரலீலை, தேவலீலை, ஜகத்லீலை, நரலீலை என நால்வகைப்படும். ஈசுவராவதாரம் நரலீலையில் சாத்தியமாகிறது. விசாலமான உயர்விடத்திலிருந்து பெருகும் நீர் அகன்ற கால்வாய்மூலம் வெள்ளமாக ஓடுவதற்குச் சமானமாகும். சச்சிதானந்தத்தின் சக்தியானது மனித உருவத்தில் வெளிப்பட்டுத் தோன்றுவது நரலீலை. மனிதனுக்கு உண்மை ஞானத்தையும் பக்தியையும் போதிப்பதற்காக ஈசுவரன் மனித உருவில் அவதாரம் செய்தருளுகின்ருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் பெருகும்போது, ஆறுகளும் ஓடைகளும் நிறைந்து அருகிலுள்ள பூமியெல்லாம் நீர்மயமாகின்றது. ஆனல் மழை நீரோ வழக்கமான வாய்க்கால்கள் வழியே ஓடிப்போய்விடு கின்றது. உலக ரட்சகருடைய அவதாரம் நிகழும் போது, அவருடைய அருளால் அனைவரும் உயர்நிலை அடைகின்ற னர். பகவானுடைய இலங்கை விஜயத்தால் பலர் உயர்நிலை அடைய வாய்ப்பு உண்டு.

பூரண தெய்வீகத் தன்மையை மனிதனுக்குக் காண்பிக் கவே பகவானுடைய அவதாரம் நிகழ்கின்றது. இத்தகைய அவதாரங்கள் மூலம் மனிதன் கடவுளோடு பேசுகின்றுன். கடவுளுடைய திருவிளையாடல்களை அவனுல் காணவும் முடி கின்றது.

மலய மாருதம் வீசும் போது, வைரமுள்ள மரங்கள் எல் லாம் சந்தன மரங்களாக மாறுகின்றனவாம். பப்பாளி,மூங் கில், வாழை முதலிய வைரமில்லாத மரங்களோ அப்படி மாறுவதில்லை. அதுபோல பகவத் கடாட்சம் பொங்கிவரும் போது பக்தியும் நற்குணமும் எவரிடமுள்ளனவோ அவர் உடனே பரிசுத்தராகி தெய் வீ க ம் நிரம்பியவராகின்றுர். மனத்துக் கண்மாசிலனுகும் போது இந்த அனுபவம் தானே சித்திக்கின்றது. உலகப்பற்றுள்ள உபயோகமற்றவர்களோ, எப்பொழுதும் போலவே இருப்பார்கள்.

ஒரு அவதார புருஷருடைய வருகையினுல் அவ்வூரில் ஏதாவது அற்புதம் நிகழவே செய்யும். பகவான் சத்திய சாயி பாபா அவர்களுடைய வருகையினுல் இலங்கையில் நிச் சயமாக இன ஒற்றுமை என்ற அற்புதம் நிகழவேதான் போ கின்றது. இன ஒற்றுமை ஏற்படும் போது மக்களுடைய பொருளாதாரம், அரசியல், ஆத்மீகம் என்பவற்றிலும் தவ ருது ஒரு திருப்பு மையம் ஏற்படும். பக்குவ சாலிகள் சந்தன மரமாக மாறுவார்கள். பக்குவ மற்றவர்கள் பக்குவசாலி களாக மாறுவார்கள்.

ஸ்ரீ இராமனுடைய இலங்கை வருகையால் அரக்கர்கள் அழிந்தார்கள். பகவானுடைய இலங்கை வருகையால் மக்கள் உள்ளத்திலே உள்ள அரக்கத்தன்மை அழிந்தே தீரும். பக வான் புத்தருடைய வருகையினுல் அகிம்சையும் சத்தியமும் தழைத்தோங்கின. பகவானுடைய வருகையினுல் அறம், நீதி என்பன தழைத்தோங்கும். புத்தபெருமானுடைய சங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தில் உயர்வு தாழ்வு கருதாது எல்லா இனமக்களுக்கும் எல்லாத்தர மக்களுக்கும் சமத்துவம் கிடைத்தது போல பகவானுடைய வருகையால் இலங்கையிலும் சாதி சமய பேதமற்ற ஒரு நிலை தோன்றப் போகின்றது. புத்த சங்கத்தைச் சேர்ந்தவர் ஒவ்வொருவரும் புத்த சமயி என்றே அழைக்கப்பட்டனர். அதுபோல பகவானுடைய வருகையால் நாம் எல்லாரும் இலங்கையர் ஆக மாறப்போகிறோம். தமிழர், சிங்களவர், முஸ்லீம் என்ற பேர்கள் மாறி இலங்கை வாசி என்ற விரிந்த மனப்பான்மையை அடையப் போகிறோம். இந்து பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்துவம் என்ற பெயர்கள் மாறி அன்பு என்ற மார்க்கம் பகவானுடைய வருகையால் தோன்றப் போகின்றது.

மகாவலியும், மாணிக்ககங்கையும் கடலுடன் கலக்கும் வரை இப்பெயரால் அழைக்கப்படும். கடலுடன் கலந்தபின் பேரும் பிறிதாகித் தீர்த்தம் ஆகின்றது. இதே போல பகவானுடைய வருகையின் பின் நாம் எல்லாரும் சாயி பக்தர்களாகி விடுவோம். பல்வேறுவகைப்பட்ட பெயர்களையுடைய சங்கங்கள் எல்லாம் சாயி சமித்திகளாகிவிடும் அற்புத நிகழ்ச்சிகளை அனுபவிக்கப் போகின்றோம்.

ஒரு அறையில் அநேக ஆயிர வருஷங்களாக அடைபட்டிருந்த இருள் ஒரு நெருப்புக்குச்சியைத் தட்டியவுடன் ஓடி ஒழிவதுபோல், பகவானுடைய வருகையால் இலங்கைவாழ் மக்களின் உள்ளங்களை மூடியிருந்த அந்தகார இருள் மறைந்துவிடப் போகின்றது. தாபம் மேலிட்டால் சந்திரனை நாடிச் செல்லவேண்டும். வறுமை மேலிட்டால் கற்பகதருவை நாடிச் செல்லவேண்டும். ஆனால் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் வருகையால் தாபம், வறுமை, பாவம் ஆகிய மூன்றும் எம்மை விட்டு நீங்கப்போகின்றது.

ஈசுவரனை நினைந்து செய்யும் எந்தக் கைங்கரியமும் மனிதனை இறைவனுக்கு அருகில் அழைத்துச் செல்லுந் தன்மை உடையது. அதுபோல பகவானை நாம் நினைந்து நாம் எக்கைங்கரியத்தை தொடங்கினாலும் அவர் எமக்கு அருகே இருந்து அவற்றைச் செவ்வனே முடித்து வைக்கின்றார்.

மனிதன் தன்னுடைய சூழலை வென்றிருக்கின்றான். ஆனால், அந்த முயற்சியில் அவன் தன்னுடைய ஆத்மீகத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்து விட்டான்- விஞ்ஞானி பரிசோதனைக் குழாயில் இருப்பதை மாத்திரமே நம்புகின்றான். விஞ்ஞானத்தின் சாதனைகளால் ஈட்டிய வெற்றிகள் எவரையும் மயக்கக்கூடிய தாய் வளர்ந்து விட்டன. அதனால் விஞ்ஞானிகள் தமது முடிவுகளுக்கப்பால் ஒன்றையும் பார்க்க முடிவதில்லை. பகவான் சத்திய சாயி பாபாவைத் தேடிச்சென்ற விஞ்ஞானிகள் தமது முடிவுகளை மாற்றிக் கொண்டார்கள். அதே போல பகவானுடைய இலங்கை வருகையால் ஆஸ்திகம் வளரும் என்பது தெளிவாகின்றது.


## ஈழத்துச் சித்தர்கள்

எழுதியவர்: நா. முத்தையா

இலங்கையில் வாழ்ந்த பதினேழு சித்தர்களின் வரலாறுகளை உள்ளடக்கியது.

ஒவ்வொருவர் இல்லத்திலும் இருக்கவேண்டிய தெய்வீக நூல். உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு உதவி நூலாகச் சிபார்சுசெய்யப்பட்டுள்ளது.

**விலை ரூபா: 10-00**

ஆத்மஜோதி நிலையம் – நாவலப்பிட்டி

(ஸ்ரீலங்கா)


**'ஸ்ரீ குமரகுருபரர்'**

**சமய இலக்கியத் திங்கள் இதழ்**

**சந்தா விபரம்**

| | | | |
|---|---|---|---|
| ஆயுட் சந்தா | (உள்நாடு) | ரூ. | 100—00 |
| ,, | (வெளிநாடு) | ரூ. | 125—00 |
| ஆண்டுச் சந்தா | (உள்நாடு) | ரூ. | 7—50 |
| ,, | (ஸ்ரீலங்கா) | ரூ. | 10—00 |
| | (வெளிநாடு) | ரூ. | 12—00 |

**விளம்பர கட்டண விகிதங்கள்**

| | | |
|---|---|---|
| அட்டை பின் பக்கம் 2 வண்ணங்கள் | ரூ. | 150—00 |
| முன் அட்டை உள்பக்கம் | ரூ. | 125—00 |
| பின் அட்டை உள் பக்கம் | ரூ. | 100—00 |
| உள் முழுப்பக்கம் | ரூ. | 60—00 |
| அரைப்பக்கம் | ரூ. | 30—00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மமே குறிக்கோள்

(பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா)

பாரத நாட்டில் தர்மம் குன்றி அதர்மம் ஓங்கி வருகின்றது. தன்னலம் கருதாத சேவையே முக்கியமானது. செயல்கள் சித்த சுத்தியுடன் இருக்கவேண்டும். சேவைக்காகவே இந்த மானிட ஜென்மம் வந்துள்ளது.

செயல்களும் சேவைகளும் இதய சுத்தத்துடன் இருக்கவேண்டும். ஈஸ்வர, சர்வபூதானம் என்பதை மறக்கக்கூடாது. நாம் செய்யும் சேவையில் அகங்காரம் நிர்மூலமாக வேண்டும். உலக இன்பத்தைக் கோரி தங்கள் ஆனந்தத்தைத் தியாகம் செய்யவேண்டும். காலத்தை வீணுக்காமல் பவித்திரமான காரியங்களில் ஈடுபடச் செய்யவேண்டும். மானிடப்பிறவி கிடைப்பது அரிது. பசு பட்சிகளைப்போன்று சமமாக நடந்து கொள்ளக்கூடாது. நமக்குத் தெய்வப் பிரசாதமாகக் கிடைத்துள்ள விவேகம், வைராக்கியம், தர்ம மார்க்கத்தை அறிந்து அதன் வழிநடந்து மற்றவர்களுக்கும் அதைப் போதிக்க வேண்டும்.

தர்மம் நசிக்கும் பதார்த்தம் அல்ல, துன்மார்க்க வழியில் செல்லும் மனிதர்களின் செயல்கள், மேகம் போன்று தர்மத்தை மறைக்கலாம். ஆனுல் பகவானின் அனுக்கிரகம் அம்மேகத்தை விலக்கி உலகத்திற்குப் பிரகாசத்தை அளிக்கும். பொதுவாக 18 வயதுமுதல் 35 வரையிலும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டிய காலம். சத்கர்மா சத் சிந்தனையிலிருந்து எத்தகைய கெட்ட பழக்கமும் ஏற்படாமல் நடந்து நமக்கும் நம் நாட்டிற்கும் நல்ல பெயர் எடுக்க வேண்டும். சேவைக்கு ஒரு வ ம்பு கூடாது. எந்தநேரத்திலும் சேவைக்குத் தயாராக இருக்க வேண்டும்.

ஆபீசுக்குச் செல்லும் வழியில் பஜாரில் ஒருவருக்கு மயக்கமோ. வலிப்போ வந்து விழுந்துவிட்டால் அதை நாம் பார்த்து விட்டால், முதலில் உதவிசெய்துவிட்டுத்தான் செல்ல வேண்டும். ஆபீசுக்குக் காலதாமதமானுலும் பறவாயில்லை எனக்கருத வேண்டும். பகவான் எல்லா இடத்திலும் பிரகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்துக்கொண்டிருக்கிறார். பிரேம தத்துவத்தில் தவிர வேறு எந்த விதத்திலும் சத்திய சாயி சத்சங்கங்கள் இயங்கக் கூடாது. பகவானின் பிரசாதமாகப் பாவித்துச் சேவை செய்ய வேண்டும்.

உண்மையான நண்பன் கடவுள் ஒருவரே. ஆபத்பாந்தா பகவான் நாமமே. ஆத்ம தர்மத்தை தானும் அனுபவித்துப் பிறருக்கும் அளிக்கவேண்டும். நாம் செய்யும் சேவை பகவத் சேவை என்பதை மனத்தால் மறக்காமல் இருப்பவன் எங்கிருந்தாலும் கெடமாட்டான்.

சேவாதனத்தின் எண்ணிக்கை முக்கியம் இல்லை. தரமே முக்கியம் .பவித்திரமான உள்ளத்துடன் உள்ளவர்கள்தேவை. சேவா தொண்டர்கள் முதலில் தியானமும், ஜபமும் தெரிந்து கொண்டே சேவை செய்ய வேண்டும். விகாரமான ஆடை அணிந்து வருபவர்களை சமிதியில் சேர்க்கக் கூடாது. பறவைகள் மரக்கொம்பில் உட்காரும் போது கொம்பு ஆடினால் பயப்படுவதில்லை. காரணம் தன் சிறக்கைகளின் மீதுள்ள நம்பிக்கையேதவிர, மரத்தின்மீதல்ல. நாம்ஆத்மசாதனையின்மீது நிற்க வேண்டுமே ஒழிய இப்புற உலகத்தை நம்பி இருக்கக் கூடாது.என் அன்புக்கடியவர்கள் பாடினார்கள். பிரேமைக்குக் காரணமும், காலமும் கிடையாது.

இக்காலத்தில் பிள்ளைகள் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தங்கள் குருவுக்கு மரியாதை செய்வதில்லை. பணம் கொடுத்துத்தானே படிக்கிறோம் என்ற எண்ணமே அவர்களை அப்படிச் செய்கிறது. ராமர், கிருஷ்ணர்கூட ஒரு குருவிடம் சிஷ்யர்களாக இருந்தவர்களே. குருசிஷ்ய பாவம் பிரதானம் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டவே அவர்கள் அவ்விதம் இருந்தார்கள். மற்றவர்களின் கஷ்டத்தை தன் கஷ்டமாக மனதில் கொண்டால்தான் சமத்துவம் பேசுவதில் பொருள் உண்டு. விநயம், பயம், விசுவாசம் இம்மூன்றும் பிரதானமானவைகள்.

உபநிடதத்தில் ஒரு கதை. கௌதமமுனிவர் தன்சீடர்களுக்குச் சகல கல்விகளும் போதித்து இறுதியாக அவர்கள் அதில் நல்ல பயிற்சி பெற்றார்களா? என்பதைச் சோதிக்கப் பரீட்சை வைத்தார். தன் ஆச்சிரமத்தில் வரட்சி ஏற்பட்ட காரணத்தால் அங்கிருந்த 400 பசுக்களும் இளைத்துவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே அவைகளைப் புல்வெளி உள்ள பசுமையான இடங்களுக்கு ஓட்டிச்சென்று வரவேண்டும் என்று கூறினார். அதைக் கேட்டவுடன் சத்தியகாமு என்ற மாணவன் புன்னகையுடன் முன்வந்தார். கௌதமரும் அவனிடம் 400 பசுக்களையும் ஒப்புவிக்கும் பொழுது, கூட இருந்த சகமாணவர்கள், ஒருவனால் 400 பசுக்களையும் கவனிக்க முடியாது. ஆகவே, தாமும் கூடச் செல்கிறோம் என்று கூறும்பொழுது சத்தியகாமு, பசுக்களை மேய்க்க உத்தரவு கொடுத்த குரு அதற்குவேண்டிய மேய்க்குஞ் சக்தியையும் கொடுப்பார் எனக் கூறி பகவத் சிந்தனையுடனும் குருவாக்கியத்தை மனனம் செய்துகொண்டும் செல்ல ஆரம்பித்தான். எப்போது திரும்பவேண்டுமென்று வினவ, 400 பசுக்கள் ஆயிரம் பசுக்கள் ஆனவுடன் திரும்பு எனக் கட்டளையிட்டார். அதற்காக எப்போது ஆயிரம் ஆகும் என்று எண்ணிக்கொண்டிருக்கவில்லை. சதா பகவத் தியானத்தில் ஆழ்ந்து பசுக்களை மிகவும் கவனமாகக் கவனித்துக் கொண்டான். ஒருநாள் குளத்தில் பசுக்கள் நீர் அருந்திக் கொண்டிருந்தபொழுது, அவனும் சந்தியாவந்தனம் செய்யும் பொழுது இந்திரன், அசரீரி வாக்கில் பசுக்கள் ஆயிரம் ஆகி விட்டன; நீ திரும்பிக்குருவிடம் செல்லலாம் எனக்கூறினார். சத்தியகாமுவும் குருவிடம் திரும்பினான். அப்போது அவனுடைய முகத்தில் பிரம்மதேஜஸ் ஜொலித்துக்கொண்டிருந்தது. அவன் சகாக்களும் குருவும் கண்டார்கள். குரு அவனிடம் நடந்த விஷயம் முழுவதும் கேட்டறிந்தார்.

உலகத்தில் அப்படிப்பட்ட மாணவர்கள் இருவர் இருந்தாலே போதும். நாம் உண்மையாக இதயத்தில் பகவானை தியானித்தால் நமக்கு எந்தவிதமான கஷ்டமும் துக்கமும் கிடையாது. சகல பூதமும் தன் சரீர பூதமே எனக் கருதிப் பிறருக்குச் செய்யும் சேவையைத் தமக்கே செய்வதாகப் பாவிக்க வேண்டும். எவன் தன் சுகதுக்கங்களைச் சமமாகப் பாவிக்கின்றானோ அவனே சேவையாளன். சுவாமிபேட்ஜை அணிந்து கொண்டு வெளியில் செல்லும் போது பிறர் கேலி செய்வார்கள் என்பதற்காக அதனைக் கழற்றி பக்கெட்டில் போட்டுச் செல்பவரும் நெற்றியிலுள்ள விபூதியை அழித்து விட்டு வெளியே செல்வதும் அவர்களுடைய பலவீனத்தைக் காட்டுகின்றன. பலவீனம் இருந்தால் எப்படிச் சேவை செய்ய முடியும்?

உங்களை யாராவது நெருங்கித் தனக்கு தெய்வநம்பிக்கை இல்லை என்று கூறினால், உனக்காக நான் பிறக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்காகவே நான் பிறந்திருக்கிறேன். உனக்கு வேண்டுமானல் தெய்வம் இல்லாமல் இருக்கலாம். எனக்கு இருக்கின்றர் என்று உறுதியாகக் கூறுங்கள். புத்தி சாமர்த்தியத்துடன் இதயசுத்தியாக நாம் எந்தக்காரியம் செய்தாலும் எக்குறையும் வராது. தெய்வ காரியமாகப் பாவித்துப் பிறர் செய்யும் சேவையைத் தன் சேவையாகக் கொள்ள வேண்டும். கோருவது சாந்தி; சாந்தி. ஆனல் புரிவது அசாந்திக்கான காரியங்களே. சத்தியத்தின் அடிப்படையிலே சேவைகள் அமைய வேண்டும். சத்தியமே தெய்வம் சத்சித் ஆனந்தமே பகவான்.

அமெரிக்காவிலிருந்து கோடி ரூபாய் பெறுமதியான இயந்திரம் வந்தாலும் மின்சக்தி இல்லாவிட்டால் இயங்காது. மின்சக்தியே பரமாத்மா. ஆத்மா அனைத்தும் நம் சக்திக்கு அப்பாற்பட்டவை, தற்காலத்தில் எல்லாச் செயல்களும் பஞ்சபூதத்துடன் சம்பந்தப்பட்டே உள்ளன. சந்திர மண்டலம் செல்வது பஞ்சபூதத்தின் சம்பந்தமே ஒழிய வேறல்ல. ஒரு வண்டி மண் நான்கு அணுவுக்கு விலைபோகிறது. ஆனல் அந்த மண்ணிலிருந்து கிடைக்கும் சிறு அளவு தங்கம் அதிக விலைக்குப் போகிறது. சிறிதாகவும், சிரமத்துடன் பெற்றதாகவும் உள்ள பொருள்களுக்கே மதிப்பு அதிகம். அதுபோல நாம் மனத்தை மிகவும் உள்நோக்கிச் செலுத்தி பகவத் அநுகூலம் என்ற இரத்தினத்தை அடைய வேண்டும்.

இராமக்கிருஷ்ணபரமகம்சர் ஒவ்வொரு நாள் கழியும் போதும் இன்று தேவியின் தரிசனை கிடைக்கவில்லை என்றே ஏங்கினர். அவருடைய தாபமே தபசாக மாறியது. சேவா மனப்பான்மை உள்ளவர்கள் மிகவும் சாதாரண உடைகளை அணிந்து, பார்வைக்கு எளியவர்களாகவும், சுத்தமாகவுந் தெரிய வேண்டும். தலைவர்கள் முதலில் சேவையில் இறங்கினல்தான் மற்றவர்களும் சேவையில் ஆர்வத்துடன் ஈடுபடுவார்கள். அப்படியில்லையேல் எல்லோருக்கும் தலைவர் ஆகப் பார்ப்பார்கள். மற்ற ஆசிரியர்கள் வாயால் பாடம் சொல்லிக் கொடுக்கலாம். ஆனல் தேகப்பயிற்சி ஆசிரியர் செய்கையில் தான் காட்ட வேண்டும். அதுவே முக்கியம். இந்த முறையை ஸ்ரீ சத்திய சாயி சேவா சமிதிகள் முக்கியமாகக் கைக்கொள்ள வேண்டும்.

அநுசூயா, சாவித்திரி முதலானவர்கள் தங்கள் மேலான குணங்களாலேயே பிரகாசமானர்கள். அரிச்சந்திரன் சத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தைக் கடைப்பிடித்ததனுலே பிரகாசமானுன். இராவண ணைத் தீயகுணமுடையவன் என்றும், இராமனை நற்குணவான் என்றும் கூறும் நீங்கள் இராவணன் குணத்தையுடையவர் களாக இருந்தால் இராவணனின் சகோதரர் ஆகிவிடுகின்றீர் கள். தீய காரியங்களை நாம் செய்யாமல் இருக்க வேண்டும். நீதிக்கும் நேர்மைக்கும் ஒத்துவராத செயல்களில் ஈடுபடக் கூடாது. இளைஞர்கள் தியான வகுப்புகளில் கலந்துகொள் ளுதல் வேண்டும். சாத்வீக ஆகாரத்தையும் மிதமாக உட் கொள்ள வேண்டும். தாய் தந்தையர்களுக்குப் பணிவிடை செய்தல் வேண்டும். இல்லையென்ருல் உங்கள் குழந்தைகள் உங்களுக்கு உதவிபுரியமாட்டா. இராமகிருஷ்ணர், விவேகா னந்தர், துக்காராம் முதலியவர்கள் சரித்திரத்தில் புகழ்பெற் றதற்கு அவர்கள் நடத்தையே காரணம்.

ஆத்ம விசுவாசத்துடன் எந்தச் செயல்கள் செய்தாலும் அவை பகவானைப் போய்ச் சேரும். யேசுநாதர் கதையே அதற்கு உதாரணம். காசியிலே கங்கா தீர்த்தம் எடுத்துக் கொண்டு இராமேஸ்வரம் இராமலிங்கேஸ்வர சுவாமியைத் தரிசனம் செய்யச் செல்லும்போது இடையில் கழுதை தாகத் துடன் தவிப்பது கண்டு ஈஸ்வரன் சர்வபூதானம் என்று கருதி கங்கா ஜலத்தை அதற்குக் கொடுத்தார். இக்காலத்தில் போட்டோவுக்கும் போஸ் கொடுப்பதற்காகவே சமூகசேவை செய்யவருகிருர்கள்.

வீட்டில் நோயாளி இருக்கும்போது அவர்களைக் கவனிக் காமல் ஆஸ்பத்திரியில் சென்று சேவை செய்வதில் பிரயோச னம் இல்லை. முதலில் வீட்டில் சேவை செய்யவேண்டும். எந் தச் சேவையையும் தெய்வப்பிரீதியாகச் செய்யவேண்டும்.

---


நிகரற்ற தத்துவ திங்களிதழ்

**'பிரசாதம்'**

ஆசிரியர்: Dr ஸ்ரீசந்திரசேகரானந்த்

*பிரதி தமிழ் மாதப் பிறப்பன்று இதழ் பிரசவமாகும்*

| ஆண்டுச் சந்தா | | ஆயுள் சந்தா |
|---|---|---|
| உள்நாடு | 20 ரூபா | 200 ரூபா |
| வெளிநாடு | 50 ரூபா | 500 ரூபா |

*பணம் அனுப்பித் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-*

Dr. (Mrs) N. R. ராதாலட்சுமி
சந்திராலயம் 'பிரசாதம்'
390, புதுமண்டபத் தெரு, மதுராந்தகம் - 603306


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவானிடம் கேள்வியும் - பதிலும்

கேள்வி: சாஸ்திரப்படிப்பு உதவி செய்யுமா?

பதில் : அதனுல் ஓரளவுக்கு உதவி செய்ய முடியும். அவை கள் அடையாளக் கம்பங்கள் போன்றவை. அவை கள் மார்க்கத்தையும், செல்லும் தூரத்தையும் குறிப்பிடு கின்றன. ஆனுல் அம்மார்க்கங்களிலிருக்கிற மேடுபள்ளங்களை அவைகளால் குறிப்பிட முடியாது. அவைகள் சரியான தூரத்தை மாத்திரமே தெரிவிக்கும். அர்ப்பணிக்கும் மனப் பான்மையுடன் கர்மத்தில் ஈடுபட்டிருங்கள். அப்பொழுது நீங்கள் இறைவன் சர்வசக்தி உள்ளவர், சர்வானந்தர்யாமி என்பதையும், உங்களினுள் நன்குஸ்தாபிக்கப்பட்டிருக்கிற தென்பதையும் உணர்கிறீர்கள். இறுதியில் நீங்களும், அவ ரும், மற்ற எல்லாமும் ஒன்றைத்தவிர வேறு இல்லை என்ப தையும் உணர்வீர்கள். இவ்விதமாக தர்மம், பக்திக்கும், பக்தி ஞானத்திற்கும் அழைத்துச் செல்கிறது. நீங்கள் பாதையில் எங்கிருந்தாலும் அங்கிருந்து ஞானத்தை நோக் கிப் புறப்படுங்கள். பசு ஒன்று கயிற்றினுல் ஒரு கம்பத்தில் கட்டப்பட்டிருக்கிறது. அது கயிற்றின் நீளம் வரை கம்பத் தைச் சுற்றி புல் மேய முடியும். அந்நிலப் பரப்பில் புல் மேய்ந்து விட்ட பிறகு, அதன் உரிமையாளன் வந்து அதை அவிழ்த்து வேறு கம்பத்தில் கட்டுவான். அல்லது கயிற்றை இன்னும் நீளமாக விட்டுக் கட்டுவான். அதனுல் அது மறு படியும் புல் மேயமுடியும். ஆனுல் முடிவில் அக் குறிப்பிட்ட இடம் காலியாகவேண்டும். இல்லாவிட்டால் அங்கு கருணையின் பரிசு இருக்கமுடியாது.

கே: ஒருவர் இறந்த பிறகு என்ன நேரிடுகிறது சுவாமிஜி?

ப: ஒருவர் இறக்கும் பொழுது என்ன எண்ணுகிருரோ, அவ் வெண்ணத்திற்கேற்ப ஜீவன் மறு பிறவி எடுக்கிறது. மல்லிகைத் தோட்டத்தின் நறுமணத்தை தென்றல் சுமந்து செல்வதைப்போல, இப் பிறவியில் ஆதிக்கம் செலுத்துகிற குணங்கள் அல்லது மனோபாவங்கள், சிறப்பியல்புகள் ஆகிய வற்றின் சூழ்நிலை அடுத்த பிறவிக்கும் சுமந்து செல்லப்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. அடுத்த பிறவி வெகு விரைவில் எடுக்கவேண்டும். ஆனல் இடைவெளி அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம். நீங்கள் விளக்குகளைப் போட்ட உடனே வெளிச்சம் வருகிறது. காற்றுடியைப் போடுகிற பொழுது சூழ் நிலையைக் குளிர்ச்சியாக்கத்தக்க வேகமெடுக்கச் சிறிது நேரமாகிறது. அது ஒரு ஸ்டவ் ஆக இருந்தால் சமையலுக்கேற்ற வெப்பத்தைக் கொடுக்க இன்னும் அதிக நேரமாகிறது. எனினும் மறுபிறவி எடுக்காத அனேகர் இருக்கின்றனர். ஏனெனில் அவர்கள் அருட்கடலில் கலந்து விடுகின்றனர்.

கே: ஆனல் மக்கள் தொகை குறைய வில்லையே?

ப: அது ஏனென்ருல் மிருகங்களும் மற்றப் பிராணிகளும் உயர்பிறப்பை எடுப்பதற்காக மானிடப் பிறவியைச் சம்பாதிக்கின்றன.

கே: மானிடர்கள் மிருகங்களைப் போல நடந்து கொள்வதற்கு இது ஒருவேளை காரணமாக இருக்குமோ?

ப: பிராணிகள், மிருகங்கள், பறவைகள் முதலியன கெட்டவை என ஏன் விவாதம் செய்கிறீர்கள்? பொறுப்பற்ற தன்மையோடு பேசாதீர்கள். ஒவ்வொரு பிராணியும் அதனுடைய தர்மத்தின்படி நடக்கின்றது. அது தர்மத்தை மீறியோ அல்லது தவறியோ செல்வதில்லை. அவைகள் மனிதர்களை விட சிறப்பான கூட்டுறவும், பரஸ்பர அன்பும் கொண்டுள்ளன. ஒவ்வொன்றையும், அதனுடைய வாய்ப்பு வசதிகள் கொண்டு தீர்மானிக்க வேண்டும். மனிதன் மிருகங்களிடமிருந்து கற்றுக்கொண்டால், சிறப்பாக வாழ முடியும். அவன் தன்னை மிகவும் தாழ்த்திக் கொண்டிருக்கிறுன். ஆண்டவன் அவதாரம் எடுக்கிற பொழுது, அவருக்கு முற்றிலும் சாதுவான இயல்புகளையுடைய சாதுக்களைப் பாதுகாப்பது என்ற ஒரு பணியும் இருக்கிறது. பிராணிகளிடையே எண்ணற்ற சாதுக்கள் இருக்கின்றனர் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

கே: தியானம் செய்வதற்கு சிறந்த நேரம் எது சுவாமி?

ப: அதிகாலை 4-30 மணியிலிருந்து 5 மணிவரை சிறப்பான காலம். அப்பொழுது உறக்கத்தினல் புது உற்சாகம் பெற்றிருக்கிறீர்கள். உங்களைச் சுற்றிலும் அனைத்தும் அமைதியாக இருக்கும். உங்களுடைய உடலிலும், உள்ளத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளர்ச்சி இருக்காது. அல்லது மாலை 7-00 மணியைத் தேர்ந்தெடுக்கலாம். அப்பொழுது உங்களுடைய பணிகள் எல்லாம் முடிந்திருக்கும். உணவு உட்கொள்ளாததால் வயிறு பாரமாக இருக்காது. நாளின் பணி களைப்படையச் செய்யாதிருந்தால், அல்லது வழக்கத்திற்கு மாருக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இல்லாதிருந்தால் அந்நிலையில் 7—00 மணிக்கு தியானத்தை ஆரம்பிக்க முடியும்.

கே: இரத்த அழுத்தம் அதிகமுள்ளவர் தியானத்தை மேற்கொள்ள முடியுமா?

ப: ஓ, அவரால் முடியும். உண்மையில் தியானம் அவரைக் குணப்படுத்தும். அது சமப்படுத்தி அமைதியாக்கிக் கொண்டிருக்கிறது. அனைத்திலும் தெய்வீகம் நிறைந்திருக்கிறதென உணரும்வரையில் தியானத்தைத் தொடர்ந்து செய்துவர வேண்டும். ஒருவர் தியானத்தின் போது ஆரம்பத்தில் இயல்பாகவே சில தோற்றங்களையும், சப்தங்களையும் அனுபவிக்கக்கூடும். அது அவரை மிகக் கடுமையாக ஈடுபடத் தூண்டுகிறது. பிறகு அவைகள் அவ்வளவு முக்கியமல்லாததாக மாறிவிடுகின்றன. ஆதலால் ஆர்வம் குறைய விட்டுவிடக் கூடாது. ஆனல் குறிப்பிட்ட காலத்தைப் பற்றி ஏன் அவ்வளவு வலியுறுத்த வேண்டும்? நீங்கள் எங்கிருந்தாலும் எப்பொழுதெல்லாம் சந்தர்ப்பம் கிடைக்கிறதோ அப்பொழுது இறைவனின் நாமத்தை ஜெபிக்க முடியும். நீங்கள் அலுவலகத்திற்குச் செல்கிற பொழுதும், திரும்பி வருகிற பொழுதும் நாவிலே நாமத்தையும், மனதிலே மகிமையையும் வைத்திருங்கள்.

கே: பிறகு நாம் ஜெபமாலையை எப்படிப் பயன்படுத்தவேண்டும் சுவாமி?

ப. ஜெபமாலை அவசியமில்லை. எத்தனை முறை நாமத்தை ஜெபிக்கிறோம் என்று எண்ணுவது ஆரம்பத்தில் உற்சாகத்திற்கு ஆதாரமாக இருக்கலாம். ஆனல் சில காலத்திற்குப் பிறகு அது தேவையற்றது. அது அவசியமற்ற கவனத்தைத் திருப்பும் ஒன்று. மேலும் அகங்காரம் அல்லது ஊக்கமின்மைக்குக்கூட காரணமாக இருக்கலாம்.

கே: நாங்கள் இதற்குமுன் பல பிறவிகள் எடுத்திருக்கிறோம் என்பது உண்மையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப: ஆம். அது உண்மைதான். ஒருமுறை மிருகண்டு முனிவர் நாரதரிடம் "நான் கடந்த அறுபது ஆண்டுகளாகக் கடுந்தவம் செய்து கொண்டிருக்கிறேன். ஆனல் இதுவரை இறைவனைக் காணும் பேறு பெறவில்லை. அச்சிறுவன் துருவன், வெறும் ஆறுவயதுப் பாலகன். கடுந்தவத்தில் ஐந்து மாதங்களைத்தான் கழித்தான். இறைவன் அவன்முன் தோன்றி அவனுடைய விருப்பங்களைப் பூர்த்தி செய்தார். இது மிகவும் அநீதி." எனக்கூறினர். அதற்கு நாரதர் "வலிமை உள்ள கையினுல் இருபது அடி அடித்துங்கூட கல்லொன்று உடைவதில்லை. ஆனல் ஒரு சிறு குழந்தை அக்கல்லைஇருபத்தொன்ருவது அடி அடிக்கிறபொழுது, அது உடைந்துவிட்டது. அதைப்போல துருவன் முற்பிறவிகளில் அநேக ஆண்டுகள் தவம் செய்திருந்தான். இப்பிறவியில் ஐந்து மாதங்கள் மட்டுந்தான் செய்தான்." என்று சொன்னர். ஆனல், "நாம் முற்பிறவிகளில் வாழ்ந்திருந்தால், அப்பிறவிகளில் நடந்த சம்பவங்கள் ஏன் நினைவுக்கு வருவதில்லை?" என நீங்கள் கேட்கலாம். இப்பிறவியில் நடந்த எல்லாச் சம்பவங்களும் உங்களுக்கு நினைவிருக்கிறதா? கிருஷ்ணன் அர்ச்சுனனிடம் "பத்தாண்டுக்கு முன்பு மார்கழி மாதத்தின் பௌர்ணமி அன்று உண்மையில் நீ எங்கிருந்தாய்?" எனக்கேட்டார். அர்ச்சுனனுல் அவ்விடத்தை நினைவுபடுத்திக்கொள்ளமுடியவில்லை. ஏனெனில் அவனுக்கு அந்நாள் எவ்வித முக்கியத்துவமும் உடையதாக இருக்கவில்லை. எனினும் அவனுல் கிருஷ்ணனின் சகோதரியைத் திருமணம் செய்துகொண்ட நாளை நினைவுபடுத்திக்கொள்ள முடிந்தது. ஏனெனில் அது அவனுடைய வாழ்வில் மறக்க முடியாத மகிழ்ச்சி நிறைந்த நாளாக இருந்தது. முற் பிறவியில் எவ்வித சிறப்பான சம்பவங்களும் இருக்கவில்லை. ஆகையால் உங்களால் எதையும் நினைவுபடுத்திக் கொள்ள முடியவில்லை. ஆனல் இறைவன் அனைத்திலும் சம்பந்தப்பட்டிருக்கிருர். ஆகையால் அவர் அனைத்தையும் நினைத்திருக்கிருர்.

---


# கூட்டுவழிபாடு

புதிய பதிப்பு

வெளிவந்துவிட்டது

**விலை ரூபா 2-00**

கிடைக்குமிடம்:

**ஆத்மஜோதி நிலையம் - நாவலப்பிட்டி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா

நா. முத்தையா

ஆண்டவனும் இப்பூவுலகத்தில் மனிதனுக வருவது உண்டு. ஒரு ஊரில் சிறிய சண்டை ஆனுல் பொலீஸ்காரர் மாத்திரம் வந்து அதனைத் தீர்த்து வைப்பார். பெருங்கலகமானுல் பொலீஸ் காரர்களுக்கெல்லாம் மேலதிகாரியாக உள்ளவர் வந்து அதனை அடக்குவார். உலகத்தில் தருமம் தேய்ந்து பாவம் அதிகரிக்கிற போது இறைவனே அவதாரம் எடுத்து வந்து பாவச்செயல்களை நீக்கி மக்களுக்கு நல்வழி காட்டுவார். நல்லவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் ஆண்டவனுக்கு முக்கியமாக உண்டு.

நாம் இப்போ வசிப்பது கலியுகம். அதுவும் கலியுகத்தின் நடுப்பகுதியில் வசித்துக்கொண்டிருக்கின்ேறாம். மக்கள் பலவழிகளிலும் பாவமே செய்து கொண்டிருக்கின்றனர். பாவச்செயல்கள் எல்லாம் புண்ணியம் போலக் காட்சி கொடுக்கின்றன. கடவுள் நம்பிக்கை குறைந்து வருகின்றது. அன்பு இல்லை; பக்தி வரண்டு விட்டது. சுயநலம் கூடிவிட்டது. இதனுல் உலகம் முழுவதிலுமே பாவச்செயல்கள் மலிந்து விட்டன.

இத்தருணத்திலே மக்களுக்கு நல்வழி காட்டவும் நல்லோரைப் பாதுகாக்கவும் ஆண்டவனே தான் மனித உருவில் அவதாரம் செய்துள்ளார். எமது ஊனக்கண்ணுல் கடவுளை நாம் காணவேண்டுமானுல் அவர் ஒரு உருவிலே வந்தால்தான் நாம் அவரைக் காணமுடியும். அவர் மனித உருவிலே வந்தாலும், அவர் கடவுள் தான் என்ற நம்பிக்கை நமக்கு ஏற்படும் போதுதான் நாம் அவரால் பலன் அடைய முடியும்.

இன்றைய கால கட்டத்தில் கடவுள் மனித உருவில் வரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதனுல் அவர் மனித உருவில் பூவுலகத்தில் தோன்றி விட்டார். ஊரும் உருவமும் இல்லாத கடவுள், ஊரும் பேரும் உருவமும் தாங்கி வந்துள்ளார். அவர்தான் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அவர்கள்.

இந்தியாவுக்குப் பாரத நாடு என்றும் ஒரு பெயருண்டு. உலகம் தோன்றிய காலந் தொட்டு பாரத நாட்டில் மகான்கள் தோன்றிக் கொண்டே இருக்கிறுர்கள். பாரத நாட்டிற்கு எத்தகைய பஞ்சம் வந்த போதிலும் மகான்கள் தோன்றுவதற்கு பஞ்சம் ஏற்பட்டதே கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திராவதி ஆற்றங்கரையில், பெனுகொண்டாவிற்கும் தருமவரத்திற்கும் இருபது மைல் தூரத்தில் ஒரு சிற்றூர். அதன் பெயர் புட்டபர்த்தி. புட்டபர்த்தி என்றால் கறையான்புற்றுகளின் பெருக்கம் என்பது பொருள். இங்குதான் ஒரு இராச குடும்பத்தில் ஸ்ரீ சத்திய சாயிபாபா 1926ம் ஆண்டு நவம்பர் மாதம் 23ம் திகதி திரு அவதாரம் செய்தார். இவருடைய அவதாரத்திற்கு முன்னர் ஒரு ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் இவருடைய பெற்றோருக்குப் பிறந்திருந்தார்கள். ஈஸ்வரம்மா என்று அழைக்கப்படும் இவரது தாயார் தனக்கு இன்னுமொரு ஆண்மகவு வேண்டும் என்று இராப்பகலாகச் சத்தியநாராயணனை நோக்கிப் பிரார்த்தனை செய்தார். அதன் பயனாகவே ஸ்ரீ சத்திய சாயி பாபா பிறந்தார். அந்தக் குழந்தைக்குச் சத்திய நாராயணன் என்று பெயரிட்டார்கள். இவருடைய தந்தையார் பெயர் வெங்கப்பராசு என்பது. சத்தியநாராயணன் பிறந்த வீட்டுக்குள்ளேயே பல அற்புதங்கள் நிகழ்ந்தன.

குழந்தையை வளர்த்திய பாயின் கீழே நாகம் ஒன்று படம் எடுத்துக்கொண்டு குழந்தையைத் தாங்கி வைத்திருந்தது. சாதாரண மனித உருவில் வந்த பகவான் மக்களுக்குத் தமது தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்திக்கொண்டே வந்தார். இதனையே மக்கள் சித்து என்றனர். பகவானோ எனக்கு சித்து என்பது ஒன்றில்லை: அது எனது இயற்கை என்றார். கடவுள் நாட்டங் கொள்ளாத மக்களுக்குக் கடவுள் நம்பிக்கையை ஏற்படுத்துவதே அவரது அவதார இரகசியமாகும்.

சத்தியநாராயணன் மிகவிரைவிலேயே ஊரிலுள்ளோர் எல்லோருக்கும் செல்லக் குழந்தையாகிவிட்டார். வசீகரமான புன்னகையால் எல்லோரையும் கவர்ந்தார். மிருகங்கள் கொல்லப்படும் இடங்களிலிருந்து விலகி இருந்தார். ஊன் உணவு சமைக்கும் வீடுகளில் உண்ணுவதைத் தவிர்த்தார். 3, 4 வயதாக இருக்கும்போதே இரக்க குணமுடையவராகவும், தருமச் செய்கையில் ஈடுபட்டவராகவும் காணப்பட்டார். பிச்சைக்காரர்களைக் கண்டால் அவர்களைத் தமது வீட்டுக்குள் அழைத்துச் சென்று உணவு, தானியம் போன்றவைகளை அவர்களுக்குக் கொடுக்குமாறு பெற்றோரை வற்புறுத்துவார்.

ஏழு எட்டு வயதாயிருக்கும்போதே சில அற்புதமான பாடல்களை எழுதினார். பாடசாலையில் நாடகங்களில் முக்கிய பங்கேற்று நடித்தார். இவர் தம் கையை அசைத்து தம் விளையாட்டுத் தோழர்களுக்கு இனிப்புப் பண்டம் வழங்கினார். மாணவர்கள் இவரைத் தமது குரு என்று ஏற்றுக்கொண்டனர். சத்தியா இல்லாவிட்டால் அவர்களால் எத்தொழிலையும் செய்ய முடிவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் உயர்நிலைப்பள்ளியில் படிக்குங் காலத்தில் நல்ல நடிகர், சிறந்த எழுத்தாளர், விளையாட்டு வீரர், சிறந்த சாரணர், இனிய பாடகர், ஒழுக்கமான மாணவர் என்ற பட்டங்களை எல்லாம் பெற்றார். ஒரு நாள் விருபாட்சர் கோயிலில் இவர் சகோதரரும் பிறரும் வியப்படையும் வண்ணம் இலிங்கத்தில் தோற்றம் அளித்தார். வீட்டிற்கு வந்தவுடன் இவர் தமது புத்தகங்களை மூலையில் எறிந்துவிட்டு ''நான் உங்களுக்குரியவன் இல்லை; நான் என் பணிகளைச் செய்யவேண்டும். என் பக்தர்கள் என்னை அழைக்கிறார்கள்'' என்றார்.

அன்றிலிருந்து சத்தியா, சத்தியசாய்பாபா என்று வழங்கப்பெற்றார். தமது முற்பிறப்பு சீரடி சாய் பாபா என்பதை தகுந்த ஆதாரங்களுடன் நிறுவினார். பாபா மக்களிடத்தில் தம்மைப்பற்றி தெய்வலீலையால் பதினாறு வயது வரையிலும், வியப்புகளால் முப்பத்திரண்டு வயது வரையிலும், பின்பு அறுபது ஆண்டுகளுக்கு மேலாக உபதேசத்தாலும் அறியமுடியும் என்றார். தமது அடுத்த அவதாரம் பிரேமசாயி என்ற பெயருடன் நிகழும் என்பதை முன்கூட்டியே அறிவித்துள்ளார்.

''உலகம் முழுவதும் என்வீடு; ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு அறை.'' என்று பாபா ஒரு முறை கூறினார். பாபா என்றால் தந்தை; சாயி என்றால் தாய்'' உண்மைப்பொருளைப் பாமர மக்களுக்கு விளங்க வைத்தலில் பகவான் தந்தையாகவும் தாயாகவும் விளங்குகிறார் என்பதையே சத்தியசாயிபாபா என்று அழைக்கின்றனர்.

பாபா மீண்டும் மனிதர்களுக்குள் வந்ததின் முதற்காரணம் உபதேசம் செய்யவே. ஷீரடியில் தம்மிடம் அழைத்த எல்லாருக்கும், இவர் எப்பொழுதும் உற்சாகம் கொடுத்தும், அச்சுறுத்தியும், அறிவுரை கூறியும், வழிகாட்டியும் வந்தார். இப்பொழுது அவர்கள் வந்ததால் தம்முடைய இனிய கண்டிப்பான குரலில் இடித்துரைத்தும், உற்சாகமூட்டியும், வழிகாட்டியும், துணைசெய்தும், பழகச் செய்தும், அறிவுரை புகன்றும், கட்டுப்படுத்தியும், வலியுறுத்தியும் வருகிறார். கேடுகள் மிகுதியாக வளர்ந்த இடத்தில் நல்லவற்றை வளர்க்கிறார். பொறுமையும் பேராசையும் தற்பெருமையும் வளர்ந்த இடத்தில் திட உள்ளத்தையும், உடலையும் வளரச் செய்கிறார்.

மனிதனைக் காப்பாற்றும் சரணாகதியில் பழக்கப்படத் தொடர்ந்து மூச்சுவிடுதலைப் போலத் திருப்பெயர் கூறுதலைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார். தன்னையறிதலையும் தொண்டையுமே துறவில் வெற்றி பெறப் பயிற்சியாகக் கொள்ள வேண்டும் என்கிறார்.

பாபா அவர்களுடைய மகிமையைக் கேள்வியுற்ற மக்கள் நாலா பக்கங்களிலிருந்தும் வரத்தொடங்கினர். பக்தர்களுடைய மனோ,தேக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருத்தங்களைப் போக்குவதில் சிரத்தையுடன் இருந்தார். தேக வருத்தமோ, மனோவருத்தமோ ஒருவருக்கு இருந்தால் ஒருவராவது சமய சாதனைகளில் ஊக்கங் கொள்ள முடியாது என்றும், ஆகவே அவர்களுடைய வருத்தங்களைத் தீர்ப்பதும் தாம் அவதாரம் செய்ததன் நோக்கமென்றும் அவரே கூறுகின்றார். அவர் தன்னுடைய வியத்தகு வல்லபங்களினால் உண்டாக்கிய ஆயுதங்களினால் சத்திர சிகிச்சைகள் கூடச் செய்திருக்கின்றார்.

தனவந்தர்களிடத்திலும் ஏழைகளிடத்திலும் ஒரே தன்மையாகவே அவர் கருணை காட்டுகிறார் என்பதற்குப் பின்வரும் செய்தி ஒரு உதாரணமாகும். ஒரு நாள் செருப்புத் தைக்கிறவன் ஒருவன் கையில் வாடிய பூ ஒன்றுடன் பகவானைத் தரிசிக்க வாசலில் காத்து இருந்தான். பாபா உடனே அவனை நோக்கி வந்து அப் பூவைப் பெற்றுக் கொண்டதோடு என்ன வேண்டும் என்று கேட்டார். அவனுடைய ஒரே ஒரு விண்ணப்பம் என்னவென்றால் பாபா தன்னுடைய வீட்டுக்கு எழுந்தருளி தான் கொடுப்பதை ஏற்கவேண்டும் என்பதாகும். பாபா தாம் அப்படிச் செய்வதாக மனப்பூர்வமாக வாக்கு அளித்தார். பாபா ஒரு நாள் திடீரென்று அவனுடைய வீட்டிற்குச் சென்றார். அவன் பகவானுக்கு அன்புடன் அளித்த வாழைப்பழத்தை ஆர்வமுடன் பெற்று அக்குடும்பத்தை ஆசீர்வதித்தார். அன்று தொடக்கம் அக்குடிசை பக்கத்திலுள்ளார் எல்லோருக்கும் யாத்திரைக்குரிய தலமாக அமைந்தது.

தன்னை நாடி வருபவர்கள் எல்லாரிடமும் பாபா, ஒழுக்க நெறியிற் சீர்திருத்தம், பற்றின்மை, சாதனை, செபம், தியானம் ஆகியவற்றில் முன்னேற வேண்டும் என்றே கேட்டுக்கொள்வார். பாபாவின் தரிசனத்தைப் பெறவரும் பக்தர்களோடு பிரத்தியேகமாகப் பாபா உரையாடுவதற்காக இரண்டு அறைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இராச மாளிகையைப்போன்ற பிரசாந்தி நிலயத்தில் பாபா உல்லாசமாக வாழ்கின்றார் எனச்சில அறிவிலிகள் பேசிக்கொண்டாலும் உண்மையில் அவர் ஏழைகளுடைய சாதாரண உணவையும், பக்தர்களினால் சமைத்துக் கொடுக்கப்படும் உணவையுமே உண்ணுகின்றார். அவர் நிலத்தில் விரிக்கப்பட்ட பாயிலேயே நித்திரை செய்கின்றார். பக்தர்கள் அவரை நேர்முகமாகத் தரிசிக்கும் பொழுது ''நான் இருக்கும் பொழுது ஏன் பயப்பட வேண்டும். உங்களுடைய நம்பிக்கை முழுவதையும் என்னில் வையுங்கள். நான் உங்களை வழிப்படுத்திக் காட்பாற்றுவேன்.'' என்று கூறுகின்றார்.

நவராத்திரி, மகாசிவராத்திரி, பாபாவின் பிறந்த தினமாகிய நவம்பர் 23ம் திகதி ஆகிய மூன்று விழாக்களும் புட்டபர்த்தியில் மிகக்கோலாகலமாக கொண்டாடப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான் பாபா கன்னியாகுமரிக் கடற்கரையில் சுவாமி சச்சிதானந்தருடன் நடந்துகொண்டிருக்கும் பொழுது அவர் அடிவைத்து நடந்த அடிச்சுவடுகளில் படிகமணிகள் தாமாகத் தோன்றின. இங்ஙனம் அற்புதமாகத் தோன்றிய 108 மணிகளை அவருடைய பக்தர்கள் சேகரித்தனர். பாபா தன்னுடைய கையசைப்பினால் அந்த மணிகளைச் சேர்த்து ஒரு மாலையாக்கினார். பகவானோடு கூட நின்ற சுவாமி சச்சிதானந்தருக்கு அந்த மாலையை அன்பளிப்பாகக் கொடுத்தார்.

இருஷிகேசத்திலுள்ள தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தின் தலைவராக இருந்த சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களால் பாபா அழைக்கப்பட்டார். சிறிது நோய்வாய்ப்பட்டிருந்த சிவானந்தர், பாபாவினால் தோற்றுவிக்கப்பட்ட விபூதியையும் கங்காதீர்த்தத்தையும் மருந்தாக உட்கொண்டு நோய் தீரப்பெற்றார். பாபா 108 உருத்திராக்க மணிகளை பவுண் வளையங்களோடு சேர்த்துக்கட்டிய மாலை ஒன்றைத் தோற்றுவித்து சுவாமி சிவானந்தருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்.

சில வேளைகளில் பாபா தன்னுடைய கை அசைக்கும்பொழுது விபூதி ஒரு பாத்திரத்தில் தோன்றி அவருடைய கிருபையால் என்றும் குறையாமல் இருக்கும். ஒரு பக்தனுடைய நெற்றியில் விபூதியை அணிய வேண்டுமானால், தன்னுடைய கைப்பெருவிரலை உயர்த்தி நெற்றியில் தொட்டுவிடுவார். எல்லாரும் கண்டு ஆச்சரியப்படக்கூடியவிதமாக அந்தப் பக்தனுடைய நெற்றியில் விபூதி தோன்றிக் கொண்டிருக்கும்.

விஜயதசமி விழாத் தினத்தன்றும் ஏனைய விழாத் தினத்தன்றும் பகவான் ஊர்வலமாகச் சென்று கொண்டிருக்கும் பொழுது இலட்சக்கணக்கான மக்கள் பார்க்கக் கூடியதாக அவருடைய நெற்றியிலிருந்து விபூதிதோன்றி கண் இமைகளிலும் கன்னங்களிலும் விழும். அவருடைய சிறந்தபக்தர்களின்இல்லங்களிலிருந்தும்ஏனையஇடங்களிலிருந்தும் விபூதியும் குங்குமமும் தோன்றிக்கொண்டிருக்கும்.

தான் விரும்பிய பொருட்களைத் தொட்ட மாத்திரத்தில் அவைகளை அதிகரிக்கச் செய்யும் வல்லபம் பாபாவின் கைகளுக்கு இருக்கின்றது. அவருடைய பக்தர்களின் பிள்ளைகளின் விவாக ஒழுங்குகளுக்கு பாபா சம்மதிக்கும் போது அவர் தன்னுடைய கை அசைப்பினால் மாங்கல்யத்தைத் தோற்றுவித்து பிரசாந்தி நிலையத்தில் தனது முன்னிலையில் நடைபெறும் திருமணத்தின் போது அதிர்ஷ்டசாலியான மணமகளின் கழுத்தில் அணியுமாறு மணமகனிடம் கொடுப்பார். சமீபத்தில் கௌரவ அமைச்சர் திரு. தொண்டமான் அவர்களுடைய பேத்தியின் திருமணத்தின் போது இந்த அற்புதம் நிகழ்ந்ததை யாவரும் அறிவர். தான் தோற்றுவிக்கும் ஒரு பொருளையாவது பாபா தன்னுடைய நலனுக்காகப் பாவிப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா நாங்கள் இருக்குமிடத்திலிருந்து வெகு தூரத்திலிருந்தாலும் எங்களுடைய ஒவ்வொரு செயலையும், நினைவையும், பேச்சையும் அவர் அறிவார். அவருடைய ஆர்வமிக்க பக்தர்கள் சங்கடங்களுக்குள்ளானுல் அவர் உடனே தன்னுடைய தூலதேகத்தை விட்டு விட்டு சூக்குமசரீரத்தோடு, அவர்களைச் சங்கடங்களினின்றும் காப்பாற்றுவதற்காக அவர்கள் இருக்குமிடத்திற்குச் செல்வார். பஞ்ச பூதங்களையும் அடக்கியாளும் வல்லபமுடையவராக இருக்கின்றுர். தன்னுடைய தெய்விக வல்லபங்களினுல் ஊர்வலங்கள் நடைபெறும் பொழுதும் திறந்த வெளி அரங்கில் சொற்பொழிவுகள் நடக்கும் பொழுதும் தோன்றும் பெருமழையையும் நிறுத்தியுள்ளார்.

சனங்கள் புகைப்பதையும், குடிப்பதையும், சினிமாப் படங்கள் பார்ப்பதையும், மீன் இறைச்சி புசிப்பதையும் விட்டுவிட வேண்டுமெனத் தூண்டுகின்றுர். பகவானுடன் தொடர்பு கொண்ட பல பக்தர்கள் இத்தீய பழக்கங்களினின்று திருந்தியமைக்கு எத்தனையோ உதாரணங்கள் கூறலாம்.

ஒருவர் பேருக்காகவோ புகழுக்காகவோ உலக செல்வங்களை விரும்பியோ புதினப்பத்திரிகை விளம்பரத்திற்காகவோ ஒரு காரியத்தையும் செய்யக்கூடாதென்பதே பாபாவினுடைய சிறந்த உபதேசமாகும். எல்லோராலும் கைக்கொள்ளப்படவேண்டும் என்று பாபா வற்புறுத்தும் நான்கு காரியங்களாவன: சத்தியம், தர்மம், சாந்தி, அன்பு என்பனவாம். முடியுமானுல் ஒவ்வொருநாளும், ஆனுல் கட்டாயமாகக் குருவின் தினமாகிய ஒவ்வொரு வியாழக்கிழமையும், பக்தர்கள் இறைவன் நாமபஜனைகளையும், கூட்டுப்பிரார்த்தனைகளையும் ஒழுங்கு செய்யவேண்டுமென்று தூண்டுகின்றுர். தான் அவதாரஞ் செய்தது சர்வமனித சமுதாயத்திற்காகவே என்று பகவான் பல சந்தர்ப்பங்களில் கூறியிருக்கிறுர்.

"எனக்கு உரித்தாக இல்லாத ஒருவரும் இந்த உலகத்தில் இல்லை. எல்லாம் என்னுடையதே. அவர்கள் என்னுடைய நாமத்தையாவது வேறு வேறு ஏதாவது நாமத்தையாவது உச்சரிக்காமல் இருக்கலாம். ஆனுல் அவர்கள் எல்லாரும் எனக்குரியவர்களே என்று பகவான் கூறியிருக்கின்றுர்.

உலகத்தில் தர்மத்தை நிலைநாட்டுவதே இந்த அவதாரத்தின் நோக்கமாகும். தன்னுடைய பக்தர்கள், பச்சிலை, புஷ்பம், பழம் நீர் இவைகளைச் சமர்ப்பித்து வணங்கவேண்டியதில்லை என்றும், ஆனுல் சத்தியம், தர்மம், சாந்தி, அன்பு ஆகியவைகளைச் சமர்ப்பித்து வணங்க வேண்டும் என்றும், இந்த நான்கு சம்பத்துக்களையும் அல்லது அவற்றுள் ஏதாவது ஒன்றையாவது அடைவதற்கு விசுவாசமாகத் தெண்டிக்க வேண்டுமென்பதையுமே பாபா எல்லாரிடமும் எதிர்பார்க்கிறுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி ராமதாஸ் அருளுரைகள்

# நல்லவனாக இரு நல்லவையைக்காண்

தமிழ் வடிவம் ம. சி. சிதம்பரப்பிள்ளை

இறைவனை எந்நேரமும் இதயத்தில் இருத்தினால் அவ் வெண்ணச்சுடர் உன்னை ஒரு உயர்ந்த நிலைக்குச் சொந்தமானவனாக்கிவிடுகின்றது. இந்தச் சுடர் நித்திய ஒளியாகி எரிந்தபடி இருத்தல் வேண்டும். ஒளி மறைய இருள் தோன்றும் என்பதனை நீ அறிவாய்தானே! எங்கள் — ஒளி அறிவு — மிகவும் தெளிவானதாகப் பிரகாசமானதாக இருந்தால் — அப்போது நாம் காண்பது கடவுளையே. அவ்வாறில்லாது தெளிவற்ற, விளக்கமில்லாத ஒளி — புல்லறிவு — நாம் காண்பது — தெய்வீகமற்ற ஒரு பிசாசுதான்.

யுதிஷ்டிரர் என்ற ஒரு நல்ல அரசன் நேர்மையான வாழ்க்கை வாழ்ந்து வந்தார். இவரது காலத்தில் வேறும் ஒரு அரசன் - பெயர் துரியோதனன் — கெட்ட எண்ணங்கள் கொண்டவன் — அதர்ம வாழ்க்கை வாழ்ந்து வந்தான்:

ஒருநாள் அவதார தெய்வமான கிருஷ்ணபரமாத்மா யுதிஷ்டிரரைப் பார்த்து, "இவ்வுலகில் மிகவும் கெட்டவனாக உள்ள ஒருவனைத் தேர்ந்தெடுத்துத் தன்னிடம் கொண்டுவரவும்" எனக்கூறினார். யுதிஷ்டிரரும் எங்கும் தேடியும் ஒருவரும் கெட்டவனாகத் தென்படவில்லை என்று திரும்பி வந்து மாயவனிடம் பகர்ந்தார். அதன் பின்பு துட்டனாகிய துரியோதனனைப் பார்த்து ஒரு நல்லவனைத் தேடித் தன்னிடம் கொண்டுவரவும் எனக்கூறினார். துரியோதனன் தேடத் தொடங்கினான். எங்கு தேடினாலும் எல்லோரும் கெட்டவர்களாகவே காணப்பட்டார்கள். அவ்வாறே கிருஷ்ணபரமாத்மாவுக்கு வந்து முறையிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதையிலிருந்து தெளிவாகும் படிப்பினை யாது? நாம் நல்லவராக இருந்தால் அகில உலகமும் எங்களுக்கு நல்லதாகவே காணப்படும். அவ்வாறே நாம் கெட்டவராக இருந்தால் யாவும் கெட்டனவாகவே புலப்படும். ஒவ்வொருவனும் ஒரு சில நல்ல தன்மைகளைப் பெற்றுள்ளான். நாங்கள் அந்த நல்ல தன்மைகளைக் காணவேண்டும். தெரிந்தும் கொள்ள வேண்டும். கெட்ட தன்மைகளைக் காணவேண்டுமெனில் முதல் உன்னுள் அடங்கிய கெட்ட தன்மைகளை தெரிந்து கொள். அவ்வாறு நாம் ஆராய்ந்து சென்றுகொண்டு வருவோமாகில் நாளடைவில் கெட்டதன்மைகள் கெட்டொழிந்துவிடும். அடுத்தவனின் கெட்டதன்மையை மாத்திரம் நீ காணும் தன்மையானுல் உன்னிடம் சொந்தமாக உறைந்துள்ள நல்ல தன்மைகள் உனக்குச் சொல்லாமல் ஓடி மறைந்துவிடும். அந்த இடத்தில் உன்னிடம் எஞ்சியிருக்கும் கெட்டதன்மைகள் அறுகுபோன்று வேரூன்றி வளரும். இவ்வுலகில் காணும் எதனையும் கண்டித்தும் குறைகள் காணும் இயல்பினராக உள்ளோம். இவ்வாறுன போக்கினுல் எமதுள்ளம் என்றும் மாறுபட்ட போக்கிலேயே சென்றுவிடும்.

ஆத்மீகத்துறை வளர்ச்சிக்கு எப்போதும் அடுத்தவனிடத்துள்ள நல்ல தன்மைகளைத்தான் நாம் காணவேண்டும். மற்றவனிடமுள்ள நல்லவைகளைக் காண்பதென்றுல் ஆண்டவனைக் காண்பதாகும். ஆண்டவன் ஒன்றே நன்மையும் உண்மையுமாகும். ஆண்டவனிடம் மற்றவனிடம் கண்டு தரிசிக்கும் போது, எங்களுக்குள்ளேயே ஆண்டவன் உறைந்திருப்பதனை உணரமுடியும். அடுத்தவனிடம் குறைகளைக்கண்டு கொண்டு வாழ்ந்தோமானுல், ஒரு போதும் எப்போதும் உள்ள எம் பெருமானை எமக்குள்ளே கண்டுகொள்ளமுடியாது போய் விடும்.

மாதாஜி வாழ்க! சுவாமி ராமதாஸ் வாழ்க!
எங்கும் இன்பமே சூழ்க
சுபம்! சுபம்! சுபம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டில் இரண்டுகள்

(கா. கு. சண்முகம்)

'ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' என்பது ஒரு பழமொழி. இதில் நாலு என்பது நாலடியாரையும், இரண்டு என்பது திருக்குறளையும் குறிக்கின்றன. இரண்டே அடிகளையுடைய பாடல்களைக் கொண்டதால், திருக்குறளுக்கு இரண்டு என்ற பெயரும் ஏற்பட்டது. இரண்டின் பல பாட்டுகளில் இரண்டு விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அக்குறட்பாக்கள் எங்கெங்கு இருக்கின்றன, அவற்றின் கருத்துக்கள் என்ன என்பதையும் பார்ப்போம்.

முதல் பாட்டு 'வான் சிறப்பு' என்ற அதிகாரத்தில் உள்ளது.

> தானம், தவம் இரண்டும் தங்கா, வியனுலகம்
> வானம் வழங்காது எனின்.

வானம் மழையைக் கொடுக்காவிடில். வையம் தானம், தவம் இரண்டையும் செய்வோரை இழந்துவிடும் என்பது இதன் கருத்து. மழை வளம் குறையின் வறுமை பரவும். அது செல்வரையும் கெடுத்துத் தானம் செய்ய இயலாதவர் ஆக்கிவிடும். அத்துடன் தவம் செய்வோருக்கும் உணவு கிடைக்காமையால், அவர்களும் தவம் செய்வதை விட்டுவிடுவர். தானம், தவத்துக்கு வானம் ஆதாரம் ஆகிறது. வானம் அடைய தானமும், தவமும் ஆதாரம் ஆகின்றன.

> 'தானமும், தவமும் தாம் செய்வாராயின்
> வானவர் நாடு வழிதிறந்திடுமே,'

என்ற ஔவையின் சொல்லால் இதை அறியலாம்.

இரண்டாவது பாட்டு:

> எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணென்ப வாழும் உயிர்க்கு,

கல்வி என்ற அதிகாரத்தில் சொல்லப்பட்டது. கற்றோரே கண்கள் பெற்றோர் ஆவர். கல்லாதவர் கண்கள் இரண்டும் இல்லாத கபோதிகளுக்குச் சமம் ஆவர். கல்வி இருவகைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. எழுத்து அறிதல். 2. எண் அறிதல்.
'எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்' எனும் ஔவையின் வாக்கியம் இக்குறளுக்கு விளக்கமாக அமைந்துள்ளது.

இல்வாழ்வான், யாவரிடத்திலும் அன்புடையவனாய் இருத்தல் வேண்டும். அன்பில்லாது தன்னலமே அவனிடம் மேலோங்கி நின்றால், அது பண்பாகாது. அன்பு மட்டும் போதாது, அறமும் செய்தல் வேண்டும். ஈதல் முதலிய அறத்தைச் செய்யானாயின் அவனால் நாட்டுக்கு என்ன பயன்?

அன்புடைமை பண்பாயிற்று; அறவுடைமை பயனாயிற்று என்பார் பரிமேலழகர்.

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.**

**மனம்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனம்தூய்மை தூவா வரும்.**

இது சிற்றினம் சேராமை என்ற அதிகாரத்தைச் சேர்ந்தது. சிற்றினத்தாரோடு சேர்வதால் நம் மனத்தூய்மையும், நாம் செய்யும் செயலின் தூய்மையும் ஆன இரண்டும் பாதிக்கப்படும் என்பது இதன் கருத்து.

ஐந்தாவது பாட்டு:

**ஒற்றும் உரைசான்ற நூலும் இவை இரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்.**

முற்காலத்தில் அரசர்களிடம் வேலை செய்து வந்த ஒற்றர்கள், முக்கியமான செய்திகளை அரசர்களுக்கு உடனுக்குடன் எப்படியும் கொடுத்து வந்தார்கள். ஆனதுபற்றியே ஒற்றர்கள் அரசனுக்குக் கண்போன்றவர்கள் என்று கூறினர். மன்னனுக்கு மற்றொரு கண் நுண்ணிய நூல் அறிவு; நூலறிவு குறைந்த அரசன் ஆட்சி குறைவுடையது என்றே கூறலாம். நூலறிவு இருப்பின் தன்னறிவோடு பல அலுவல்களை நன்கு கவனிக்கலாம். எனவே ஒற்றும், நூலும் வேந்தர்களுக்கு இரு கண்கள் போன்றவை என்பதில் ஐயமில்லை.

ஆறு, ஏழாவது பாட்டுகள் ஒரு தொழிலைச் செய்யும் போது கவனிக்கவேண்டிய விஷயங்களைக் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஊறுஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறு என்பர் ஆய்ந்தவர் கோள்'

பழுது படும் வினைகளைச் செய்யாது விடுதல், பழுது படாது என்று எண்ணித் துணிந்த தொழிலில் இடையிலே பின்வாங்காமை ஆகிய இரண்டும் வினைத்திட்பம் பற்றி ஆராய்ந்தவர் கொள்கையாகும் எனக் கூறுகிருர் வள்ளுவர். செய்யத் தொடங்கிய செயலைக், குறையோடு செய்து முடித்தல், வெல்லவேண்டிய பகையைப் பூரணமாக வென்ருெழிக்காமல் பின்னும் வளர்வதற்கு இடம் கொடுப்பதைப் போன்று தீயதாகும் என்றும் கூறுகிருர். வினை, பகை ஒழித்தல் இரண்டிலும் குறை வைக்கக் கூடாது. அப்படிக் குறை வைப்பின் நீறு பூத்த நெருப்பு பெரு நெருப்பாக மூண்டு விடுவதைப் போன்று கெடுதல்செய்யும் என்பதைக் கீழ்க்காணும் குறளால் அறிகிருேம்.

'வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்.''

எட்டாவது குறள்:

'அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.'

நல்ல பண்பு உடையவர் என்று சொன்னுல் அவரைப் பற்றி இரண்டு விஷயங்கள் நாம் அறிகிருேம். (1) அவரிடம் அன்பு குடிகொண்டிருக்கும். (2) அவர் நல்ல குடியில் பிறந்தவர் ஆதல் வேண்டும். குடிஎன்பது சாதியைக் குறிப்பதல்ல; பரம்பரையாக நல்ல குடும்பம் என்று புகழப்படுவதாகும். இவ்விரண்டும் இல்லாதவரைப் பண்புடைமை உடையவர் என்று எண்ணுவது சிரமம்.

ஓர் குடியை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டுமானுல், அக்குடியில் அல்லது அதன் தலைவருக்கு இரண்டு கருவிகள் தேவை: 1. முயற்சி. 2. நிறைந்த அறிவு. முயற்சி மட்டும் இருந்து அறிவில்லையேல், பயன் இல்லை. அதுபோல் அறிவறிந்தும், முயற்சி மேற்கொள்ளாவிடின் பயன்கிட்டாது.

''ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையால் நீளும் குடி.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தல வரலாறு

# திருக் கழுக் குன்றம்

இது இந்தியாவில் செங்கல்பட்டுக்குத் தென்கீழ்த் திசையில் ஒன்பதாவது மைலில் உள்ளது. இது வடக்குத் தெற்காக 2½ மைல் நீளமும் கிழக்கு மேற்காக 2 மைல் அகலமும் உள்ளது. நான்கு பக்கமும் மலைகளால் சூழப்பெற்றிருப்பதால் குறிஞ்சி நாடென்றும் மலைநாடென்றும் அழைப்பர்.

தொண்டை மண்டலம் இருபத்து நான்கு பிரிவுகளையுடையது. இதில் ஒன்று களத்தூர்க்கோட்டம் என்ற பெயரை உடையது. இந்த கிராமத்துக்குக் கிழக்குப்பக்கமாக ஒன்பதாவது மைலில் சிற்பவேலைகளுக்குப் பேர்போன மகாபலிபுரம் என்னும் கிராமம் உண்டு.

ஐந்நூறு அடி உயரத்தில் உள்ளது சஞ்சீவிமலை. அதற்கு நான்கு சிகரங்கள். நான்கு வேதங்களும் நான்கு சிகரங்களாக அமைந்திருப்பதனால் அதற்கு வேதகிரி என்னும் பெயருமுண்டு. அந்த வேதகிரிக்குரிய வேதகிரீஸ்வரர் அதர்வண வேத சிகரத்தின் மீது இருக்கிறார்.

"பக்ஷி தரிசனம் பாப விமோசனம்" என்பது பழமொழி. பிரம்மாவின் மானசீக புத்திரர்கள் எண்மர் சிவபெருமானைக் குறித்து சாரூப பதவியை வேண்டிக் கடுந்தபசுபுரிந்தார்கள். சிவபெருமான் இவர்கள் தவத்திற்கிரங்கி பிரசன்னமானார். சாரூப பதவிவேண்டித் தவம் புரிந்தவர்கள் சிவபெருமானுடைய திருக்காட்சி கிடைத்த உடனே சாயுச்சிய பதவி வேண்டும் என்று கேட்டார்கள். ஆச்சரியமும் கோபமும் அடைந்த சிவபெருமான் நினைவொன்றாயிருக்கப் பேச்சு வேறாயிருக்கிறதே என்று நீங்கள் செய்த இச்சிவத்துரோகத்திற்கு எண்மரும் கழுகுகளாகப் பிறந்து உழல்வீர்களாக என்று சாபமிட்டார். சாபத்திற்கு அஞ்சிய எண்மரும் இறைவனிடம் மன்னிக்குமாறு வேண்டுதல் செய்தார்கள். யுகத்திற்கு இவ்விரண்டு பேராய்க் கழுகுகளாகப் பிறந்து பிறப்பைப் புனிதப்படுத்திக் கொள்ளுங்கள் என்று சாபவிமோசனமுங் கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரேதாயுக ஆரம்பத்தில் சான்மலிநாட்டில் விருத்த சிரவர் என்னும் சகலகலைவல்லபரிடம் சண்டன், பிரசண்டன் என்னும் இரு புத்திரர்கள் கழுகுகளாகப் பிறந்து பிதாவின் அநுக்கிரகத்தால் ஸ்ரீவேதகிரிக்கு வந்து தவஞ்செய்து அந்த யுக முடிவில் மோட்சம் அடைந்தார்கள்.

திரேதாயுகாரம்பத்தில் சம்பாதி, சடாயு என்னும் இரு புத்திரர்கள் கழுகுகளாக அவதரித்து அவரவர்களது தேக வலிமையைப்பற்றி வீரியம் பேசி, அம் மகரிஷியினது சாபத்தால் இவர்கள் வீரியப் பேச்சு கெடுதி அடைய அவர் அநுக்கிரகத்தால் ஸ்ரீவேதகிரியை அடைந்து தவஞ் செய்து அந்த யுக முடிவில் மோட்சம் அடைந்தார்கள்.

துவாபரயுகாரம்பத்தில் சம்புகுத்தன், மாகுத்தன் என்ற இருமுனிவர்களும் கழுகுகளாகப் பிறந்து, சிவமே பெரி தென்று ஒருவனும் சக்தியே பெரிதென்று மற்றொருவனும் வாதாடி வழக்கிட்டு பரமசிவத்திடம் விண்ணப்பிக்க அவர் எதிரில் தோன்றி, சிவமே சக்தி; சக்தியே சிவம்; ஒன்றை விட்டு மற்றொன்று பிரிக்கற்பாலதல்ல வெனச் சொல்லியும் கேளாதவர்களாய் மீண்டும் ஒருவருக்கொருவர் வாதாடவும் பரமசிவம் இவர்களுக்கு கழுகுருவாக உழலச் சாபமளித்தார். அச்சாபத்தைஇருகழுகு முனிவர்களும் ஏற்று, ஸ்ரீவேதகிரிக்கு வந்து தவஞ்செய்து, அந்த யுகமுடிவில் மோட்சம் அடைந்தார்கள்.

கலியுகாரம்பத்தில் பூஷா, வீதாதா என்கிற சம்பு, ஆதி யென்னும் பெயர் பூண்ட இரு முனிவர்கள் தவஞ் செய்ய பரமசிவம் இவர்களது தவத்துக்கிரங்கிச் சாரூபப்பதவியை அநுக்கிரகித்தார். சாரூபபதவி வேண்டவே வேண்டாம்; சாயுச்சிய பதவியை இப்போதே தரவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். பரமசிவத்தின் உத்தரவுக்கு மாறுசொன்ன அபராதத்தால் நீங்கள் கழுகுருவத்தோடு ஸ்ரீ வேதகிரியை அடைந்து தவஞ் செய்யுங்கள்; இந்தக் கலியுக முடிவில் சாயுச்சிய பதவியைத் தருகிறோம் என சிவபெருமான் அநுக்கிரகித்தார். அவ்விருகழுகுகளுமே இன்றும்சரியாகப் பதினொருமணிக்கு மலையைச்சுற்றியும் மலையில் உள்ள கோயிலைச் சுற்றியும் வட்டமிடுவதைப் பார்க்கலாம். அதில் ஒன்று கோயில் மதிற்சுவரிலே வந்து தங்கும். அதன் பின் படிப் படியாக இறங்கித் தத்தி ஒரு சிறு பாறையிலே சர்க்கரைப் பொங்கல் தட்டோடு உட்கார்ந்திருக்கும் பண்டாரத்திடு பக்

கத்திற்கு வந்துசேரும். அவர் கையிலே உள்ள சர்க்கரைப் பொங்கலைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடும். குன்றிலே உள்ள தண்ணீரில் தங்கள் அலகுகளைக் கழுவிக்கொண்டு திரும்பவும் வட்டமிட்டு பறந்து வான்வழியில் மறைந்து போகும்.

இந்த இரண்டு கழுகுகளும் காலையில் கங்கையில் ஸ்நானம் செய்கின்றன. மத்தியானம் உணவு அருந்தக் கழுக்குன்றம் வந்து விடுகின்றன. இரவு இராமேசுவரம் கோயில் கோபுரத்தில் சென்று நித்திரை செய்கின்றன என்றும் கூறுவர். ஆனால், காசியிலும் இராமேசுவரத்திலும் இவர்களுக்கு பூஜை இல்லை; பார்த்ததற்குச் சாட்சியும் இல்லை. உண்ண உணவுக்குத் திருக்கழுக்குன்றம் வருவது நிதரிசனம் தினசரி நிகழ்ச்சி. இங்கு கோயில்கொண்டிருப்பவர் வாழைக் குருத்துபோன்ற வடிவம் உடையவர். சுயம்பு மூர்த்தி என்பார்கள். ஆனால் நாம் காண்பது கவசமிடப்பட்ட சிவலிங்க உருவைத்தான். இவர்தான் வேதகிரி ஈசுவரர். இவரை இந்திரன் பூஜிப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. இந்திரன் பூஜை என்றால் ஏதோ நீரால் அபிஷேகம் மலர்களால் அர்ச்சனை என்றில்லை. இடிஇடித்தே பூஜை. இடிகோபுரத்தின் பேரிலேயே விழுந்து மூலவரை மூன்று முறை வலம் வந்து பூமிக்குள் இறங்கி விடுகிறது. இதனால் கோயிலுக்கோ இறைவனுக்கோ கெடுதி ஒன்றும் நேரிடுவதில்லை. இந்தத் தகவலை நிந்தாஸ்துதியாகச் சொக்கநாதப் புலவர் ஒரு பாட்டில் பாடியிருக்கின்றார்,

அடிபட்டீர், கல்லாலும் எறிபட்டீர்
அத்தனைக்கும் ஆளாய் அந்தப்
படிபட்டும் போதாமல் உதைபட்டீர்,
இப்படியும் படுவார் உண்டோ?
முடிபட்ட சடையுடையீர்! கழுக்குன்றீர்!
முதற்கோணல் முற்றும் கோணல்
இடிபட்டும் பொறுத்திருந்தீர், சிவசிவா
உமைத்தெய்வம் என்னலாமோ?

என்பது பாட்டு.

கழுகுகளைத் தரிசிப்பதற்கு இமயகிரி முதல் கன்னியாகுமரிவரையிலுள்ள பக்த ஜனங்கள் ஏராளமாய்த் தினசரி வருகிறார்கள். "கழுக்குன்றிற் கழுதூட்டும் கைத்தோழர்" என திருக்கயிலாய பரம்பரைச் செங்குந்தர் சங்கப்பட்டயத்துள் சொல்லியிருக்கிறது. அச்செங்குந்தர்களால் ஆதியில் ஆதரிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பெற்ற பண்டாரங்கள் தாங்கள் சுதந்திர கர்த்தாக்கள் என தற்போது சொல்லிக்கொள்ளுகின்றனர். இந்தப் பட்சிகளுக்கு அன்னமூட்டுவது வெகுகாலமாக நடந்துவருவதாக சாசனங்களில் உள்ளன. 3-1-1681 அன்று பகல் பன்னிரண்டு மணிக்கு இங்கு வந்த டச்சுக்காரர்கள்கூட இப்படிக் கழுகுகள் வருவதையும் அவை உண்டு திரும்புவதையும்பற்றி அன்றே எழுதி வைத்திருக்கிறார்கள்.

இறைவர் குருமூர்த்தி வடிவமாக மாணிக்கவாசகருக்குக் காட்சி கொடுத்த சிறப்புடையது இத்தலம். மாணிக்கவாசகரும் தேவாரம் பாடிய மூவரும் இத்தலத்தைப் பாடியுள்ளனர். மலைமீதிருக்கும் கோயிலில் உள்ள இறைவியின் நாமம் பெண்ணினல்லாள். கோயிலின் கிழக்கே சங்கு பிறந்த குளம் இருக்கிறது. இக்குளத்திற் பன்னிரண்டாண்டுக்கு ஒருமுறை ஒரு சங்கு பிறக்கிறது. இத்தீர்த்தத்தில் முழுகிக் குன்றத்தை வலம் வருவது மக்கள் வழக்கம். மலையிலே சிறந்த பச்சிலைகளிருப்பதால் இத்தலத்திலே பல நாட்கள் தங்கி மலையை வலம் வருவதால் பிணிதீரும் என்பர். சங்குத்தீர்த்தத்திற்கருகில் உருத்திரகோடி என்னும் தேவாரவைப்புத்தலம் உள்ளது. இறைவர் உருத்திர கோடீஸ்வரர். இறைவி அபிராமசுந்தரி.

மகாவலிபுரத்தை அரசாண்டிருந்த சோழ வம்சத்து சுரகுரு சக்கரவர்த்தியானவர் தனது குடிகளின் வேண்டுகோளின்படி ஸ்ரீவேதகிரிக்கருகிலுள்ள காட்டில் வேட்டை ஆடினார். அப்போது அவ்வனத்திலிருந்த மாயீசன் என்னும் பன்றியானது வேட்டைக்காரர்கள் கையில் அகப்படாது மறைந்தது. சக்கரவர்த்தியானவர் அத்துஷ்டப் பன்றியைக் கொல்லப் பாணம் பிரயோகித்தார். அப்பாணமானது அப்பன்றியைக் கொன்றுவிட்டு, அருகே மேய்ந்திருந்த பசுவையுங் கொன்றது. பன்றியானது மாயீசன் என்னும் இராட்சசனாகமாறி, அரசனுக்குத் தன் வரலாறு முழுவதும் சொல்லிப் போனான். திலோத்தமை என்னும் பசுவானது தேவகன்னிகையாக மாறி, "அரசனே! நான் உண்மைப் பசுவல்ல; நந்திதேவர் சாபத்தால் பசுவாக மாறி இக்காட்டில் சஞ்சரித்திருந்தேன்; உமது பாண விசேஷமானது என் சாபத்தை நிவர்த்தி செய்தது; நீங்கள் பசுவைக் கொன்றதாகவும் கோஹத்தி உங்களைச் சூழ்ந்ததாகவும் எண்ண வேண்டாம்" என்று சொல்லி திலோத்தமை மறைந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்டைக்குக் கூடவந்த குஷ்டநோய் கொண்ட ஓர் நாய் தாகவிடாய் தணிக்க அம்மலைமீதிருந்த சுனைக்குச் சென்று தவறி அதில் விழுந்ததும் குஷ்டநோய் தீர்ந்து அதன் தேகமெல்லாம் பொன் போல பிரகாசித்தது. இதைக் கண்ட மந்திரி தனக்குண்டான குஷ்டநோயைத் தீர்த்துக்கொள் வதற்காக நாய் சென்ற வழியே சென்று பார்த்தபோது, அச் சுனை நீர் புழுக்களால் நிறைந்திருப்பது போல் கண்டான். ஆயினும் வாய்க்குள்ளே நீர் பருகாமல் ஸ்நானம் செய்தான். தேகம் முழுதும் சொர்ணகாந்தியாகப் பிரகாசித்ததேயொழிய வாயிலுள்ள வெண்குஷ்டம் நீங்கவில்லை. இவ்வற்புதத்தை மந்திரி அரசனிடம் சொன்னன். அன்று முதல் மந்திரிக்கு மூத்துமணி வெள்வாய் என்று பேர் வழங்கிற்று.

சுரகுரு அரசன் மகாபலிபுரம் திரும்பிப் போகும் போது, அம்மலையில் தவஞ்செய்து கொண்டிருந்த பூஷா, விதாதா என்னும் கழுகு முனிவர்கள் அரசர் போவதைத் தடுத்து இவ் வேதகிரி மகிமையினையும் தீர்த்தங்களின் மகிமையினையும் சொல்லி, அரசன் செய்த கோஹத்தி தோஷம் நிவாரணமாகும் பொருட்டு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யும்படி சொல்லி ஆத்மோபதேசமும் செய்தார்கள்.

இதைக்கேட்ட சுரகுரு அரசன் ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்து, வேதமலைக் காட்டினை அழித்து, நகரமுண்டாக்கி, பல்வேறு ஜனங்களைக் குடியேற்றி, திருமலை அடிவாரத்தில் கோஹத்தி தோஷமும் நீங்கும் பொருட்டுச் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து சத்திரம், சாவடி, அன்னசாலை, வறியார்க்குத் தங்குமிடம் முதலியன அமைத்தான். கோயில் நித்திய நைமித்தியாதி பூஜா கைங்கரியம் கிரமமாக நடைபெறும் பொருட்டு அநேக கிராமங்களையும் உற்சவாதிகள் கிரமமாக நடைபெறும் பொருட்டு, ஆபரணம் வாகனுதிகளையும் ஏற்பாடு செய்தான். தான் பிரதிட்டை செய்த சிவலிங்கப் பெருமானையும் மற்றுமுள்ள பரிவார தேவதைகளையும் பூஜிப்பதற்கு காசியிலிருந்து ஆதிசைவர்களை வரவழைத்து அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுத்தான். பின்னர் திருமலையாண்டவனை தரிசித்துக் கிரிப்பிரதக்ஷிணம் செய்து வந்தான். இப்படிச் செய்து வருங்காலத்து இச்சுரகுரு சக்கரவர்த்தியின் பாபகர்மங்கள் எல்லாம் சிரசின் வழியாகவும் ரோமத்துவார மூலமாகவும் காக்கை உருவில் கிளம்பிப் பறந்து எதிரே போய் மலைபோல் நின்றன. இம்மலை காக்கைக்குன்று எனப் பெயர்பெற்று விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திருமலை யாண்டவனைப் பூசித்து வந்தவர்கள் மேலப் பட்டுக் கிராமத்தில் ஸ்ரீ பூதகிரிஸ்வரர் ஆலயத்தைப் பூஜித்து வந்த கௌசிக கோத்திரத்தவர்களாவார்கள். இக்கோயிலைப் பூஜித்து வரும் ஆதி சைவர்களை நாயனுர் என்றும், பட்டர் என்றும், குருக்கள் என்றும், சிவருத்திர பண்டிதர் என்றும் அழைக்கப்படுவார்கள். காசியிலிருந்து வரவழைக்கப் பெற்றவர்கள் பாரத்வாச கோத்திரத்தவர்கள். இவர்கள் திருச்சிற்றம்பல பட்டர் எனவும் சொல்வார்கள்.

திருமலைப் பெருமானது உற்பத்திக்காலம் சொல்ல முடியாதாதலின் அநாதி யென்றும்; உத்திர கோடி க்ஷேத்திரம் ஆதியென்றும் சொல்ல வேண்டும். தாழக் கோயிலில் சுரகுருச் சக்கரவர்த்தியால் பிரதிஷ்டை செய்த பக்தவச்சலர் ஆலயம் உற்பத்திக்காலம் சுமார் மூவாயிரம் வருடத்திற்கு மேற்பட்டது எனக் கருதவேண்டும். கோயில் மதிற்சுவர் நான்கு பெரிய கோபுராதிகள் கூட்டம் ஆயிரம் வருடத்திற்கு மேல் சொல்ல வேண்டும். ஆதி பேரம்பலத்தம்பிரான் சிவானுக்கிரகத்தால் மேற்படி நான்கு கோபுரங்களையும்வேலையாட்களுக்கு விபூதியே கூலியாகக் கொடுத்து நடத்தியதாகச் சொல்லுகிறுர்கள். அவ்விபூதிப்பிரசாதமே அவரவர்கள்செய்த வேலைக்குத் தகுந்த கூலியாக அவர்களுக்குப் பிரயோஜனப் படுமாம். இந்தப் பேரம்பலத்தம்பிரான் காலத்தில் திருமலையேறும் வழி கல்லும் முள்ளுங்கலந்து சரியான பாட்டையாக இல்லாமை நோக்கி, தற்போது சுகமாக ஏறும் படிக்கட்டுக்களை அமைத்ததாகச் சொல்லப்படுகிறது.

ஓர் காலத்தில் சிவபெருமான் நந்திதேவரை அழைத்து இந்த கைலையங்கிரியின்சிகரங்களில் மூன்று சிகரங்களைப் பூவுலகத்தில் மூன்று இடங்களில் வைப்பாயாக என உத்தரவு அளித்தார். அவ்வாறே நந்திதேவர் மூன்று சிகரங்களையும் கொண்டுவந்து வடக்கே மல்லிகார்ச்சுனபுரத்தில் ஒன்றும், திருக்காளத்தியில் ஒன்றும், இந்தத்திருக்கழுக்குன்றத்தில் ஒன்றுமாக வைத்தார். ஆகையால் இவைகளில் ஒன்றைத் தரிசித்தாலும் கைலாயத்தைத் தரிசித்த பலன் அடைவார்கள். இதனுல் இந்த க்ஷேத்திரம் சிவபுரம் என்றும், தக்ஷிணகைலாசம் என்றும் வழங்கி வருகிறது. இந்தத் தலத்திற்கு வருபவர்கள் பஞ்சபஞ்சஉஷத் காலத்தில் சங்க தீர்த்தத்தில் ஸ்னனம் செய்து தங்கள் சாதி சமயா சரீர அனுட்டானங்களை முடித்துக்கொண்டு, மெதுவாக நடந்து வேதகிரியைப் பிரதக்ஷிண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமஸ்காரம் செய்தால் சகல பாபதோஷங்களினின்று விடுபட்டு சிவபெருமான் அருகே வீற்றிருக்கும் பெரும் பாக்கியத்தைப் பெறுவார்கள். இம்மையில் புத்திர பௌத்திராதிகளோடு இஷ்டகாம்யாதி சித்திகள் பெற்று நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பொருந்தி வாழ்வார்கள் எனச் சுரகுரு அரசனுக்கு கழுகு முனிவர்கள் உபதேசித்தார்கள். இத்தலத்தில் அநேக தீர்த்தங்கள் உள்ளனவாயினும் 12 தீர்த்தங்கள் மிக முக்கியமானவையாம்.

காடுடையான் காதல்செய் கோயில் கழுக்குன்றே
—*சம்பந்தர்*

கழுக்குன்றமர்ந்தான் றன்னைக் கற்பகத்தைக் கண்ணாரக்கண்டேனானே
—*அப்பர்*

கன்றினோடு பிடிசூழ்தண் கழுக்குன்றமே
—*சுந்தரர்*

பிணக்கிலாத பெருந்துறைப்பெரு மானுனுமங்கள் பேசுவார்க்
கிணக்கிலாததோ ரின்பமே வருந்துன்பமேதுடைத் தெம்பிரான்
உணக்கிலாததோர் வித்துமேல்விளை யாமல் என்வினை ஒத்தபின்
கணக்கிலாத்திருக்கோலம் நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே.
—*மணிவாசகர்*

நீடோய் கழுக்குன்றிலீசா வுயிர்த்துணை நின்பதமே
—*பட்டினத்தார்*

செகத்திலுச்சம் பெற்றம ராவதி
யதற்கு மொப்பன் றுத்தழ கேசெறி
திருக்கழுக் குன்றத்தினில் மேவிய — பெருமாளே.
—*அருணகிரியார்*

---

## பாபாவின் பொன்மொழிகள்

அறியாமை அறிவினால் மாத்திரமே நீங்கும். இருள் ஒளியினால் மாத்திரமே அழிக்கப்படும். எப்படியான விவாதங்களும், பயமுறுத்தல்களும், தூண்டுதல்களும் இருளை விலகச் செய்யாது. ஒரு ஒளிப்பிளம்பு — அவ்வளவுதான். இருளகன்று விடுகிறது. அந்த மாதிரியான ஒளி உங்களிடத்தில் உண்டாவதற்குப் பிரயத்தனப்படுங்கள். அந்த ஒளி உங்களுக்குள்ளேயே இருக்கிறது. ஆனால் அதன்மேல் அபாரமான பலவகையான பொருட்கள் சுமத்தப்பட்டு அதனை நசுக்குவதால், அது வெளித்தோன்ற முடியவில்லை. அந்த ஒளி தோன்றுகின்ற பொழுது உங்களுக்கு ஏற்படும் விடுதலையே மோட்சம் என்று சொல்லப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூஜ்யஶ்ரீ ஸித்த நரஹரி குருஜி அருளாசி

பூஜ்ய ஶ்ரீ குருஜி அருளாசியுடன்-C.K. நரஸிம்ஹாச்சாரி-செயலாளர்

மதுரை ஸித்தாச்ரம அபூர்வ பிரசுரங்களில் ஸௌராஷ்ட்ர மொழியில் திருக்குறள்-பாயிரம் ஒன்று. 'அங்கயற்கண்ணி அணிமாலை' என்னும் இந்நூலின் ஆசிரியர் ஶ்ரீ கலியபெருமாள் சிறந்த பண்பாளர்-ஶ்ரீ I. V. கிருஷ்ணமூர்த்தி மூலம் ஸௌராஷ்டிரக் குறள் நூலைப் பெற்றுப் பார்வையிட்டார்கள். திருவள்ளுவர் அருளிய திருக்குறள் முறையே நாற்சீரும் முச்சீரும் கொண்ட ஈரடிகளால் அமைந்த தீந்தமிழ்க் குறள் வெண்பாக்களால் ஆனது.

ஸம்ஸ்கிருதத்தின் மூலமொழி, ப்ராக்ருதம். ஐம்பெரும் பிராக்ருத மொழிகளில் ஸௌரஸேனி என்னும் ஸௌராஷ்ட்ர மொழியும் ஒன்று. அந்த ஆதிகால ஸௌராஷ்ட்ர மொழியில் மூலத்தமிழ்க்குறள் படியே சீரும் தளையும் சிறிதும் பிறழாமல் ஈரடிக்குறள் வெண்பா யாப்பிலேயே உயர் தனிச் செம்மொழியின் ஸௌராஷ்ட்ரக் குறள்மொழிபெயர்ப்பைக் கண்டார் ஶ்ரீ கலியபெருமாள்.

உலகமொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பெற்ற தீந்தமிழ்க் குறளை ஸித்தாச்ரமப் பெருங்கவிஞர் அமரர் S. S. ராம் அவர்கள் யாத்த ஸௌராஷ்ட்ரக் குறளின் தனிப்பெரும் அற்புதத் தன்மையைக் கண்டு வியந்தார்.

அந்த ஸௌராஷ்ட்ரத் திருக்குறளின் மூலஸ்தானத்துக்கு மதுரை மாரியம்மன் தெப்பக்குளம் மேல்கரையில் அமைந்த ஸித்தாச்ரமத்துக்கு ஒருநாள் ஶ்ரீ கலியபெருமாள் தம் தர்ம பத்தினியுடன் வந்தார். பகவான் ஶ்ரீ ஸித்தகுருஹரியைத் தரிசித்துப் பூஜ்யஶ்ரீ ஸித்த நரஹரி குருஜி ஆசி பெற்றார். அன்றுமுதல் நவில்தொறும் நூல்நயமாய் ஓங்கி வளர்கிறது அவர் தொடர்பு.

''சித்த அக்நி குண்ட ஸம்பூதாயை நம'' என்பது அம்பாளின் நாம மந்திரத்தில் ஒன்று. அறிவாகிய அக்நி குண்டத்தில் தோன்றியவள் என்பது அதன் பொருள். சித் அக்நி குண்டத்தில் அன்று தோன்றிய அன்னை மீனாள் ஶ்ரீ கலியபெருமாள் திருவுள்ளத்தில் இன்று தோன்றித் தம் அபூர்வ மஹிமையை எளிய இனிய தமிழில் சொற்சித்திரமாக இந்நூலில் காட்சிதருகிறாள். அங்கயற்கண்ணி வரலாறு முதல், அன்னை அருள் ஈறாய் ஏழு பகுதிகளைக்கொண்ட இந்த ''அங்கயற்கண்ணி அணிமாலை'' உலகுக்கு உபகாரமாகும் உயர்ந்த துதிநூல்-கதிநூல் எனத் தகும். வெண்பாக்களால் அமைந்து ஶ்ரீ கலியபெருமாளை இன்று புகழேந்தியாக்கும் புனிதநூல் ஆகும்.

அடக்கமே உருவான, அன்பும் பண்பும் நிறைந்த ஸத்குண ஸம்பன்னர் ஶ்ரீ கலியபெருமாளும் அவர்தம் இல்லற நல்லரசியாரும் எல்லா ஸ்ரேயஸும் பெற்று இனிது வாழ ஸித்தாச்ரம பூஜ்ய ஶ்ரீ குருஜி அவர்கள் இந்த மங்களா சாஸனத்தை அருளியுள்ளார்கள். ஓம் ஸித்த ஓம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதரின் உணவு மாமிசமா மரக்கறியா?

— மாத்தளை — அருணேசர் —

அவர்கள் இவ்வறத்தை மீறி நடந்தால் உயிர்களுக்குத் துன்பஞ் செய்தவர்களாகி அதனால் தவமிழந்தவர்களாவர். கொலை முதலியவற்றை அகற்றியிருப்பதே தவமாகும்.

இதனை, "நோன்பென்பதுவே கொன்று தின்னாமை" என்று ஔவையார் கூறியுள்ளதினாலும், "கொல்லா நலத்தது நோன்மை" என்று நாயனார் கூறியுள்ளதினாலும், பகவத் கீதையில், "ஏ! பார்த்தா! எந்த யோகி புருடன் அந்நிய உயிர்களின் சுகதுக்கங்களைத் தானனுபவிப்பது போல் சமமாய்ப் பார்க்கின்றானோ அந்த யோகி மேலானவனாகும்" என்று பகவான் அருளியுள்ளதினாலும் அறியலாம். அன்றியும், கொல்லாவிரதம் பூண்டவரே உண்மைத் துறவிகளாவர்.

"உற்றநோய் தோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு" (திருவள்ளுவநாயனார்)

"அறிவினா லாவதுண்டோ பிறிதினோய்
தன்னோய்போற் போற்றாக்கடை" (,,)

"தம்முயிர்போ லெவ்வுயிருந் தானென்று தண்ணருள்கூர்
செம்மையருக் கேவலென்று செய்வேன் பராபரமே" (தாயுமானார்)

"மன்னுயிரைக் கொன்று வதைத் துண்டுழலாமல்
தன்னுயிர்போ லெண்ணித்தவமு டிப்பதெக்காலம்" (பத்திரகிரியார்)

"மன்னுரு யாவையும் தன்னுயிர் போற் செய்யு மாதவம் போல்
பின்னொரு மாதவ மில்லை சண்டாய் பேதை நெஞ்சே"

"சிவகாருண்ய முள்ளவர்கள் செய்வதே தபஞ்செபங்கள்
சிவகாருண்ய முள்ளவர்கள் செய்வதே தியானந்தானம்
சிவகாருண்ய முள்ளவர்கள் செய்வதே தியாகம் யாகம்
சிவகாருண்யமென்றால் சிற்சுக மடையலாமே"

"கொலையாதி நெறியகன்ற ஞானந்தானே
கூறரிய மேலான ஞானமாகும்
கொலையாதி யகன்றொழுகும் தவங்கடாமே
குற்றமிலா நற்றவமென் றுரைக்கு நூலும்

கொலையாதி யகற்றிய நல் லறங்கடாமே
குவலயத்தி லொப்பரிய வறங்களாகும்
கொலையாதி யகன்ற பெருஞ் செல்வந்தானே
கூறிலுயிர்க் கிதமான வாழ்வதாமே'' (சிவஞானதீபம்)

இவ்விதம், பல மகான்களும் கொல்லா விரதமே தபசிகளுக்கு நல்ல விரதமெனக் கூறியுள்ளது காண்க.

''தலைமையந்தணர் தேவர் குரவர்பான்
மலைதலின்றி வழிபடு வாழ்க்கையும்
கொலை துறத்தலுங் காமங் குறைத்தலும்
தலைவகாயத் தவமெனப் பட்டதே'' (பகவத்கீதை)

என்பதனையுமறிக.

இன்னும், கொல்லா விரதத்தைக் கைக்கொள்ளாமல் செய்வது இறைவனுக்கு உகந்ததல்ல என்பதனைப் பின்வரும் அருச்சுனனின் செயலாலறிக.

அருச்சுனன் கடவுளை நோக்கி அருந்தவஞ் செய்தபோது அவனது அன்பையும் அருளையும் சோதித்தறிய வேண்டி இறைவன் தமது பரிவாரங்களுடன் பன்றியுருவெடுத்து அவனது தவச்சாலையை அணுகினர்.

அப்போது அப்பன்றிகளிலொன்று அவனது தவச்சாலையை அழிக்க எத்தனிக்க, அதனைக் கண்ட தபசியாகிய அருச்சுனன் கோபமூண்டு, சீவகாருண்ய விரதத்தையே மறந்து தனது வில்லால் அப்பன்றியைக் கொலை செய்தான். இங்ஙனம் கொன்றதால், இவன் உயிர்களிடத்து அருளிலாது தவஞ்செய்தானென்பதை இறைவன் அறிந்து மறைந்தருள, அதனை அறிந்தபின்தான் அருச்சுன யோகி உண்மையை உணர்ந்தான்.

தபசிகள் புலால் புசிக்கவும் கூடாது என்பது விதி. ஏனெனில் தபசிகள் புலாலைப் புசித்துத் தபஞ் செய்வார்களானால் அவர்களின் உடல் கொழுத்து தமோ குணமிகுந்து மனம் ஒரு நிலையில் நில்லாமல் கண்டபடி அலைந்து தவத்திற்கு இடையூறுண்டாகும். ஆதலால் தபஞ் செய்வோர்கள் மரக்கறிப்பதார்த்தங்களையே, அதுவும் பசி வந்தபோது மாத்திரமே புசிக்க வேண்டும் என்னும் விதி ஏற்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கனியேனும் வறியசெங் காயேனு முதிர் சருகு
கந்த மூலங்களேனும்
கனல்வாதை வந்தெய்தின் அள்ளிப் புசித்துயான்
கண்மூடி மௌனியாகி"

*என்று தாயுமான அடிகளார் அருளியதை அறிக.*

இவ்வித காரணங்களினுல் கொல்லா விரதம்பூண்டு தபஞ் செய்வதே துறவிகளுக்குரிய விதி என்பதை நன்கு உணரலாம்.

இவ்விதியைக் கடைப்பிடித்து நடக்க வேண்டிய ரிஷிகளாகிய தபசிகள் அக்காலத்தில் எப்படி மாமிசத்தை உண்ண விரும்பியிருப்பார்கள்? அக்காலத்திலிருந்த சில துஷ்ட அரசர்களின் வழக்கத்தை யொட்டி எங்கோ இரண்டொருவரிடையே விருந்துபசாரங்கள் நடந்திருக்கலாம். என்றுலும் அப்படிப்பட்ட மூட வழக்கங்கள் இருந்த சமயத்தில் பல சமயாச்சாரியர்களும், புத்தர்பிரானும், மற்றும் பல சான்ருேர்களும் உடனே அவதரித்து அவ் வழக்கங்களை அடியோடே நிறுத்திவிட்டதிலிருந்து அவ்வழக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை அறியலாம்.

ஆயினும், சில ரிஷிகள் புலாலுண்டிருக்கிருர்களே அது ஏனென்று கேட்கலாம். மகரிஷிகள் தபோதனர்களாகையால் அவர்கள் தபம் நீங்கியவுடனே அவர்களின் பசிப்பிணியை நீக்குவதற்காக முயன்ற சில அன்பர்கள், தமக்கு வழக்கமான புலாலுணவையே அவர்களுக்குக் கொடுத்திருக்கிருர்கள். அந்த ரிஷிகளும் உண்டிருக்கலாம்.

பட்டினத்தடிகள்கூட ஒருதடவை பசிவந்தபோது ஒரு வீட்டின் முன்னின்று கையேந்தியபோது, அவ்விடம் புலைச்சேரியாதலால், அவர் நின்ற வீட்டில் அச்சமயம் மாட்டிறைச்சி வெந்துகொண்டிருக்க, அதில் ஒரு துண்டு அவர் கையிலிடப்பட்டு அதைப் புசித்தார்.

அதைக் கண்ணுற்ற அவரின் சீடரான பத்திரகிரி அரசர் அருவருப்படைந்தார். அதை உணர்ந்த அடிகளார் தாம் புசித்ததை கக்கியபோது அலரிமலர்களே வெளிவந்தன என்று அவர் சரித்திரமுணர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைக் கதைகள் - 2

— முத்து

## நரியைக் குதிரை செய்த திருவிளையாடல்

திருவாதவூரடிகள் அரிமர்த்தன பாண்டியனுடைய முதன் மந்திரியார். பாண்டியனுக்குக் குதிரைகள் வாங்கும் பொருட்டு நாற்பத்தொன்பது கோடி பொன்னோடும் சென்றார். திருப்பெருந்துறையில் சிவபிரானால் ஆட்கொள்ளப் பெற்றார். ஆட்கொள்ளப்பெற்ற அக்கணமே ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் இறைவனுக்கே ஆக்கினார். குதிரை வாங்குவதற்காகக் கொண்டு சென்ற அத்தனை பொன்னையும் கோயில் திருப்பணிக்கே செலவு செய்தார்.

இவரது செய்கை அறிந்த பாண்டியன் ஏவலாளரை அனுப்பி, இறைவனரது கட்டளைப்படி மதுரைக்குத் திரும்பினார். ஆவணி மாச மூல நட்சத்திரத்தன்று குதிரைகள் வந்து சேரும் என்று பாண்டியனிடம் கூறித் தமது மந்திரித் தொழிலை மேற்கொண்டார்.

சுற்றமாகிய பாசத்திலிருந்து நீங்கி ஆணவ மலத்தை அறுத்துச் சிவயோகத்தில் திளைக்கும் வாதவூரடிகளை பாண்டியன் அழைத்து இன்னும் குதிரைகள் வரவில்லையே என்று கேட்டான். மணிவாசகர் ''மூன்று நாளைக்குள் வந்துவிடும். குதிரைகள் நிற்பதற்கு லாயம் வேண்டும். அக்குதிரைகளுக்கு தண்ணீர்த் தடாகங்களைத் தோண்டுவிக்கவும் நகரை அலங்கரிக்கவும்'' என்று வேண்டினார். பாண்டியன் ஆணைப்படி ஏவலாளர் குதிரை லாயங்களை அமைத்தனர். பல வாவிகளையும் நீர்நிலைகளையும் தோண்டினர். நகரை அழகுறச் செய்தனர்.

மூன்று நாட்கள் கடந்தும் குதிரைகள் வந்தில. மணிவாசகரைத் தண்டித்துக் குதிரை வாங்கக் கொண்டு சென்ற பணம் முழுவதையும் பெற்றுக்கொள்ளுமாறு தண்டலாளரிடம் பாண்டியன் கட்டளையிட்டான்.

தண்டலாளர் விரைந்து சென்றனர். வாதவூரருடைய தலையில் கல்லை ஏற்றினர்; வெயிலில் நிறுத்தினர். அப்போது வாதவூரர் சிவபிரானுடைய திருவடியை நினைந்தவராய் யாதோர் துன்பமுமின்றி நின்றார். வாதவூரர் இறைவனரிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மை முழுவதாக ஒப்புக்கொடுத்த பின் அவருக்கு வந்த இன்னல்கள் எல்லாவற்றையும் இறைவனுரே ஏற்றருளினுர். இரவானதும் வாதவூரரைச் சிறையில் தள்ளி அடைத்து வருத்தினர் தண்டலாளர். இரவு கழிந்தது. சூரியன் உதய மாஞன். இறைவனுர் தனது அடியானுடைய துன்பத்தை நீக்கத் திருவுளங்கொண்டருளினுர்.

நந்திதேவர் முதலிய கணநாதர்களை அழைத்தருளினுர். அவர்கள் வணங்குகின்றனர். "ஆவணி மாதத்து மூலநாள் முதலிலே வந்துவிட்டது. இன்றைக்கு நாம் பாண்டியன் சினங்கொள்ளா முன்னே குதிரைகளையெல்லாங் கொண்டு போய்க் கொடுக்கவேண்டும். அனைவரும் காட்டில் உலவும் நரிகள் அனைத்தையுங் கொண்டுவந்து, தாவிச்செல்லுங் குதிரைகளாக்கி நீங்கள் யாவரும் குதிரைச் சேவகர்களாய் அவற்றின்மீது ஏறிக்கொண்டு முன்னே செல்லுங்கள். நாமும் நோக்குவோருக்குக் குதிரைச் சேவகர் என்னும் கருத்து உண்டாக அவ்வாறே வருகின்ருேம்" என்று அருளிச் செய்தார். ஆணையை மேற்கொண்ட சிவகணநாதர்கள் நரிகளை எல்லாம் ஓரிடஞ் சேர்த்தனர். குதிரைகளாகச் செய்தனர். பின்பு குதிரைகளை நடத்துகிற சேவகராஞர்கள். இறைவரும் வேதமாகிய குதிரையின்மேல் எழுந்தருளினுர்.

இந்த மாயக் குதிரைக் கூட்டங்கள் மேற்றிசையை நோக்கி நடந்தன. இறைவர் ஏறிய வேதமாகிய குதிரை இவற்றின் நடுவே சென்றது. மேலெழுந்த புழுதிகள் எல்லாத் திக்குகளிலும் நிறைந்தன. அக்குதிரைகள் தமது நடையினுலே மேட்டைப் பள்ளமாக்கின; பள்ளத்தை மேடாக்கின.

பெண்கள், வேதமாகிய குதிரை மீது வரும் பேரழகனைக் கண்டு "இவன் மன்மதனே? முருகனே? மாயனே? இந்திரனே?" என ஐயுற்றனர். அவருள் சிலர் அவன் அழகு அனைத்தையும் கண்ணுகிய வாயினுல் பருகினர். இந்திரஜால வித்தை காட்டுபவனைப் போல குதிரை வீரனுகத் தன்னைக்காட்டி ஆடவரையும் மகளிரையும் மயக்கி நடந்தருளினுர் ஈசனுர்.

குதிரைகளின் கனைப்பொலியும், வீரர்களின் ஆரவாரமும் ஒன்றுகூடித் திசைகளைச் செவிடாக்கின. வேதமாகிய குதிரையின் பாகனுகிய சிவபெருமான் மதுரை நகருக்கு அரைக்காத தூரத்தில் வந்தருளினுர். அப்போது குதிரைகளின் வரவைக்

கண்டவர்கள் முகமலர்ந்து விரைந்து ஓடி நகரை அடைந்த னர். அரசன் இச்செய்தி அறிந்து திருவாதவூரரைச் சிறை விடுவித்துச் சிறப்புச் செய்தான். குதிரைகளை எதிர்கொள்ள யாவரும் ஆயத்தராயினர். பாண்டியன் தன் முன்னோர்களும் கண்டறியாத தோற்றத்தையும் விரைந்து செல்லும் நடை யினையும் உடைய குதிரைகளைப் பார்த்தான். "நாமும் இந்திர னைப்போல ஆயிரம் விழிகளைப் பெற்றாலும் இவற்றின் பொலிவு களைப் பார்க்க முடியாது." என்ற மகிழ்வால் அழகிய குதிரை களில் ஏறிவந்த வீரரை நோக்கி வியப்புற்று, திருவாதவூரரை நோக்கி "இவருள் தலைவர் யார்?" என்று வினவினன். அனைத் தையும் அறியவல்ல அமைச்சர் "ஐயனே! நான் அதனை அறி யேன்" என்றார்.

அங்கு நின்ற குதிரை வீரர்களை நோக்கிய பாண்டியன், "உங்களுக்குள்ள தலைவர் யார்?" என்றார். குதிரை வீரர் 'இவர்' எனச் சுந்தரனாரைக் காட்டினர். இறைவன் வேதமா கிய குதிரையை நடத்திக் கொண்டு பாண்டியன் முன் வந்தார். பாண்டியன் மனமயங்கித் தன்னிலை மறந்து இருக் கைவிட்டெழுந்தான். கைகளைச் சிரசின் மீது குவித்துக் கொண்டு நின்றான். சிவபெருமானுடைய ஆணையினாலே அறிவு மயங்கினான். அறிவு உள்ளத்தே தோன்றிற்று, "நாம் ஒரு குதிரை வீரனைக் கண்டு எழுந்து கைகுவித்து வணங்கி நின்ற நிலை என்ன?" என்று கருதினான். இருக்கையில் திரும்ப அமர வெட்கினான்.

குதிரை வீரராகிய சிவபெருமான் பாண்டியனைப் பார்த்து "அரசனே! உன் சொல்லைக் கடவாத அமைச்சராகிய வாத வூரர் நீ கொடுத்த பொருளை யெல்லாம் தாமாகவே எமக்கும் எமது பரிசனங்கட்கும் நிறைய வழங்கினார். ஆதலால் தேவர்கட்கும் கிடைத்தற்கரிய நல்ல குதிரைகள் உனக்கு வந்தன. இக்குதிரைகளை இன்றைக்கு நீ என்னிடத்திலிருந்து கயிறு மாறி ஏற்றுக்கொள்ளும் முறையினால் இக்குதிரைகள் உன்னுடையனவேயாகும். ஆதலால் அவை நாளைக்கு என்ன தன்மை அடைந்தனவேனும் எனக்கும் உனக்கும் அதைக் குறித்து யாதொரு வழக்கும் இல்லை இது குதிரை வாணி கத்தின் வழக்கம்" என்றார்.

குதிரை வீரர்கள் தத்தம் குதிரைகளை விரைந்து ஓடும்படி செய்தனர். பாண்டியன் அதனைப் பார்த்து வியப்படைந் தான். மந்திரி முதலானோரைப் பார்த்து முடி அசைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகையுடன் பெருமகிழ்ச்சி கொண்டான். சிவபெருமானுகிய வீரரும், வேதப்புரவியை இடசாரியும் வலசாரியுமாகச் செலுத்தி யாவரையும் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்திஞர். தேவர்களும், மற்ற மக்களும், மதுரையிலுள்ளாரும் மகிழும்படி இறைவர் குதிரையைச் செலுத்திஞர். பாண்டியன் முன் தம் வீரருடன் வந்து நின்ருர். சிவபெருமாஞர் தாம் ஏறி வந்த வேதமாகிய குதிரையைத் தவிர மற்றைய மாயக் குதிரைகள் எல்லாவற்றையும் கயிறுமாறி அரசன் கையிற் கொடுத்தருளிஞர். உடனே பாண்டியன் பாகர்கள் கையில் கொடுக்க, அவர்கள் அரண்மனையிலுள்ள பந்திகளில் அவற்றைச் சேர்த்தனர்.

அரசன் குதிரை வீரர்களுக்கெல்லாம் தலைமையான வீரராகிய பெருமாஞருக்கு பட்டாடை ஒன்றைக் கொடுத்தான் அவர் அதனைச் செண்டிஞலே வாங்கி பின்வந்த வீரரிடம் கொடுத்தார். இதனைக் கண்ணுற்ற பாண்டியன் வெகுண்டான். திருவாதவூரர் இப்படிப் பெற்றுக் கொள்ளுதல்தான் அவர்களுடைய வழக்கம் என்று சமாதானம் கூறிஞர்.

பாண்டியன் எல்லாக் குதிரை வீரர்கட்கும் பட்டாடைகள் போர்த்துச் சிறப்புச் செய்தான். அவற்றையெல்லாம் அவர்கள் பெற்றுக் கொண்டபின்னர் அருள் வடிவமாக வந்த சோமசுந்தரக் கடவுள் வேதமாகிய குதிரையோடு மறைந்தருளிஞர். கணநாதர்களாகிய குதிரை வீரர்களும் அவரோடு மறைந்தார்கள்.

நரியைக் குதிரை செய்த இக்கதையை நாவுக்கரசர் திருவாரூர்த்திருப்பதிகத்திலே பின்வரும் திருமுறைப்பாடலில் குறிப்பிடுகின்ருர்.

> ''நரியைக் குதிரைசெய் வானும் நரகரைத் தேவுசெய் வானும்
> விரதங்கொண் டாடவல் லானும் விச்சின்றி நாறுசெய் வானும்
> முரசதிர்ந் தானைமுன் ஞேடமுன்பணித் தன்பர்க ளேத்த
> அரவரைச் சாத்திநின் ருனு மாரூரமர்ந் தவம் மானே.''

நரியைக் குதிரையாக்கிய வரலாறு மாணிக்கவாசகர் பொருட்டு நிகழ்ந்தது என்று பார்த்தோம். தேவாரம் பாடிய மூவருக்கும் முந்தியவர் மாணிக்கவாசகர், என்பதற்கு இஃது ஒரு சான்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நரியைக் குதிரைப் பரியாக்கி" (647) என்று குறிப்பிடுகின்ருர் மணிவாசகர்.

தேவர், மானுடர், நரகர் என்னும் முத்திறத்தவருள் இடையரராய மானுடர் தத்தம் வினைக்குத்தகத் தலையாய தேவராயும் கடையரராய நரகராயும் பிறப்பர். தேவர் நரகராதல் அற்புதம் அன்று; நரகர் நேரே தேவராதலே அற்புதமாகும், விரதம் என்பது நியமம். தவம் என்பனவற்றையுங் குறிக்கும். இறைவன் இவற்றைக் கொண்டாடவல்லவன். இங்ஙனம் அவன் கொண்டாடாவிட்டால் நியமம், தவம் முதலிய விரதங்களை எவரும் மேற்கொள்ளமாட்டார். அவற்றைக் கொண்டாடுவது எவர்க்கும் எளிது. அவற்றின் அளவிற்குத் தக்க பயனைக் கொடுத்தல் அரிதினும் அரிது. இவ்வருஞ் செயல் செய்யவல்லவன் எங்கும் நிறைந்த திருவாரூரன். மனுவேந்தனது சத்திய விரதமும் அதனைக் கொண்டாடி அருளிய வன்மையும் அவை முதலிய பலவும் இங்கு நினைக்கத்தக்கன.

வித்தில்லாமலே முளைக்கச் செய்யும் வல்லமை யாருக்குண்டு? இறைவன் ஒருவனுக்கே உண்டு. விண்ணுலகம், மண்ணுலகம் ஆகிய அண்டங்கள் அனைத்தையும் விதை விதைக்காமலேயே தோற்றுவிப்பாய். நிலைபெறச் செய்வாய். கரக்கவும் செய்வாய். உனக்கே உரியநான் அந்தப் பிரபஞ்சத்துக்கு உரியவனுக என்னைச்செய்து கொண்டதினுல் நான் வஞ்சகன். புலால் உடம்பை நான் என்று பாவிப்பதால் நான் புலையன். உடல் பற்றுவைத்திருப்பதால் நான் உன் சொரூபத்தில் கலக்க முடியாது. என்னைப்பக்குவப் படுத்துவதற்கு உன் பொருட்டுப் பித்துப்பிடித்தவனுய் என்னை உன் கோயில் வாயிலில் வைத்தாய். உன் அன்பருக்குத் தொண்டனுகவும் என்னை அமைத்துள்ளாய். இவையெல்லாம் உன் கருணை. உலகத்தவர் வளர்த்த மரம் பயனற்றதாயினும் அதை வெட்டிக் களைவதில்லை. அங்ஙனம் உன்னுல் உருவான என்னைப் புறக்கணித்து விடவேண்டாம்.

உலகப்பற்று வைத்துள்ள ஜீவாத்மாவுக்கு தெய்வப்பற்று வருவதற்கு தெய்வத்தின் கிருபை வேண்டும். அத்துடன் நல்லார் இணக்கமும் அவசியம். கால தேச நிமித்தம் ஆகிய முப்பாலுக்கும் அப்பாற்பட்டவன் பரம்பொருள். அவனுக்கு ஆதியும் அந்தமும் இல்லாததால் அவன் காலாதீதன். தான் யாண்டும் தன் மயமாய் இருந்து கொண்டு தனது மாயா சக்தியால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டங்களைத் தோற்றுவிக்கவும் ஒடுக்கவும் செய்வதால் அவன் தேசாதீதன். எச்செயலும் அவனை வந்து பாதிப்பதில் லையாதலால் அவன் கர்மாதீதன் காரண காரியாதீதன். அத்தகைய பரவஸ்துவே ஆனந்தாதீதனுய் உள்ளான்.

நுண்ணறிவு படைத்திருந்தாலும் இந்த ஆத்மனை அடையும்பேறு தீய ஒழுக்கத்தினின்று விலகாதவருக்கில்லை. புலனடக்கமே வடிவெடுத்தவனுக சாதகன் இருக்கவேண்டும். நல்லடக்கம் பெருதவருக்கில்லை. தியானம் பயிலாதவருக்கில்லை. மனம் அடங்கப் பெருதவனுக்கும் இல்லை.

கீதையில் பிரக் ஞானம் என்பது பரப்பிரம்மத்தைக் குறிக்கிறது- ஆனல் ஈண்டு அது தெளிந்த நூல் அறிவு எனப் பொருள் படுகிறது. பரம்பொருளின் அனுபூதி பெறுவதற்கு வெறும் நூலறிவு போதாது. சதாசாரம் அல்லது நல்லொழுக்கமே வடிவெடுத்தவனுக சாதகன் இருக்க வேண்டும். நல்வாழ்வு வாழவேண்டும் என்னும் விரதத்தினின்று அவன் பிசகலாகாது. அவனுடைய பொறிகள் புலன்களில் ஆசை கொண்டு போகலாகாது. பரம்பொருள் சொரூபதியானம் தீவிரமாகப் பழகவேண்டும். மனம் ஒடுங்கிய நிலையில் அவன் உறுதி பெற்றுவரவேண்டும். பரவஸ்துவானது பிரபஞ்சத்திற்கு அப்பாற்பட்டது. ஆதலால் அதனேடு யோகம் ஆவதற்குப் பிரபஞ்ச நுகர்ச்சிக்கு ஏதுவான கருவி கரணங்களை ஒடுக்குதல் அவசியமாகிறது.

வித்தின்றி விளைவாய் எனப் பொருள்பட்டு திருமேனி கொள்ளும் முறைமையை உணர்த்தியதாகவும் கொள்ளலாம். இறைவன் இங்ஙனம் செய்தல் என்பது, சில காரியங்களை அவற்றிற்குரிய நியத காரணம் இல்லையாகவும், பிற காரணமே காரணமாய் அமைய அவற்றை நிகழச் செய்தலாம். அது நாவுக்கரசருக்குக் கல்லே தெப்பமாய் அமையக் கடலைக் கடந்து கரையேறச் செய்தமை. ஞானசம்பந்தருக்கு ஆண் பனைகளே பெண் பனைகளாய்க் காய்தரச் செய்தமை. சுந்தரருக்கு செங்கல்லே பொன்னுகிப் பயன்படச் செய்தமைபோல்வனவாம். இவைபோலும் செயல்கள் பிறவும் கேட்கப் படுதலின், அவைபற்றியே அடிகள் இவ்வாறு அருளிச் செய்தாரா வர்.

"விச்சதின்றியே விளைவு செய்குவாய்" என்ற மணிவாசகரின் அடியை ஒற்றியே நாவுக்கரசர் 'விச்சின்றி நாறு செய்வானும்' என்று எடுத்தாண்டுள்ளார். மணிவாசகர் முந்தியவர் என்பதற்கு இதுவும் ஒரு அத்தாட்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்களின் முதற் பிறப்பிற்கு வினையாகிய காரணம் இல்லையாகவும், அவைகட்கு முதற்கண் நுண்ணுடம்பைக் கொடுத்த பின் அதன்வழித் தோன்றிய வினைக்கீடான பிறவியைத் தருதலைக் குறிப்பதாகச் சிவஞானபோதமாபாடியத்துள் கூறப்பெற்றதையும் ஆராய்ந்து சிந்தித்தற்குரியதாகும்.

முரசு என்பது தியாக முரசு. ஆனை என்பது தியாகராசர்க்குரியதும் முரசைத் தாங்கியதுமாகிய ஆனை. இராசாக்களில் இருவர் முக்கியமானவர்கள். ஒருவர் சிதம்பரத்தில் உள்ள நடராசா. அடுத்தவர் திருவாரூரிலுள்ள தியாகராசர். நடராசர் உடம்பெல்லாம் பாம்பணிந்தவராகக் காணப்பட தியாகராசர் அரவை அரையிலே சாற்றி நின்றார் எனக் குறிப்பிடுவதிலும் ஒரு சிறப்பு உண்டு.

---

சிறிது நேரம் தியானத்தையும் செபத்தையும் காலைத் தேநீராகவும், பூசையையும் அர்ச்சனையையும், நண்பகல் உண்டியாகவும், சில நற் சிந்தனைகளை அல்லது சிறந்த நூல்களைப் பாராயணம் செய்வதை அல்லது லிகித ஜெபத்தை மாலை சிற்றுண்டியாகவும் தேநீராகவும், பத்து நிமிட நேர மௌனம் படுக்கைக்குச் செல்லுமுன்னர் அருந்தும் ஒரு பேணி பாலாகவும் உட்கொள்ளுங்கள். மேலே காட்டிய சாதனைக்கிரமம் உங்களுடைய ஆத்மாவினைச் சந்தோஷமாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருப்பதற்குப் போதுமானது.

—பாபா


ஆத்மஜோதி

# சிறப்பு மலர்

அகில உலக இந்து மகாநாட்டில் வெளியிடப்பெற்ற ஆத்மஜோதி சிறப்பு மலர் விற்பனைக்கு உண்டு. மூவர்ண அட்டைப் படத்துடன் கூடிய இம்மலரில் அறுபதுக்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

**மலர் ஒன்றின் விலை ரூபா 50-**

தொடர்பு கொள்க:

ஆத்மஜோதி நிலையம் — நாவலப்பிட்டி
(இலங்கை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறவிப் பயன்

—அ. சிவசுப்பிரமணியபிள்ளை

மானிடப் பிறவி மாண்புடையது. எல்லாப் பிறவியும் இறைவனுடைய ஆணையால் கிடைக்கிறது. இறைவன் உயிர்களை முட்டையிலிருந்தும் வேர்வையிலிருந்தும் வித்திலிருந்தும் கருவிலிருந்தும் ஆகிய இந்த நான்கு தோற்றங்களிலும், தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் ஆகிய ஏழு பிறப்புக்களிலும், எண்பத்துநாலு லெட்சம் யோனி பேதங்களிலும் தோற்றுவிக்கிருன்.

அவைகளில் எல்லாவற்றிலும் மானிடப் பிறவியே சிறந்தது. அதுவே பிறவியாகிய கடலை நீந்த உதவுகிறது. இதனையே, ''அரிது அரிது மானிடராய்ப்பிறத்தல் அரிது'' என்று ஔவைப் பிராட்டியாரும், ''எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்'' என்று மாணிக்கவாசகப் பெருமானும் அருளியுள்ளார்கள்.

மெய்கண்ட சாத்திரங்களில் ஒன்ருகிய சிவஞான சித்தியாரில், ''உண்டு பல்யோனி யெல்லாம் ஒழித்து மானுடத்துதித்தல் கடலை கையால் நீந்தினன் காரியங்காண்'' என்று அருளியிருக்கிருர். அத்தகைய பிறவியில் நாம் செய்ய வேண்டியவை எவை? என்பதை நீதிநூல்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. அவை ''எப்பிறப்பாயினும் ஏமாப்பு ஒருவர்க்கு மக்கட் பிறப்பைத்'' தவிர வேறு பிறவிகளில் இல்லை. அதில் கற்றலும், கேட்டலுமின்றி அதன் வழியே நிற்கவேண்டும் என்பதையும் உணர்த்துகின்றன. வள்ளுவர் பெருந்தகையாரும், ''கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக'' என்றும் கூறியிருக்கிருர்.

சுவரை வைத்துக்கொண்டு சித்திரம் வரைய வேண்டும் என்பது முதுமொழி. இதை நாம் ஒவ்வொருவரும் அறிவோம். ஆகவே எத்தனையோ பிறவிகளில் நமக்கு அடைய முடியாத ஒரு சிறந்த பேற்றை அடைவதற்கு இவ்வுடலை இறைவன் நமக்குத் தந்திருக்கிருன். வாய்த்த இப்பிறவியை வைத்துக்கொண்டு பயனடைய வேண்டும். இறைவனை வணங்கத் தலையும், புகழைச் சொல்ல வாயும், நினைப்பதற்கு நெஞ்சத்தையும் தந்த தலைவனை வணங்கி வாழ்த்தாமல் 'எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை நண்ணறியாமல் நழுவுகின்ருர்'களே என்று திருமூல நாயனுரும் வருந்துகின்ருர். இறைவனை வணங்காமல் இருந்தால் பிறவியாகிய துன்பக் கடலிலிருந்து நாம் கரையேற முடியுமா? நமக்கு எவ்விதத்திலும் ஒப்பு சொல்ல முடியாதவனுடைய பாதத்தில் சேராமலிருந்தால் நம்முடைய மனக்கவலைதான் மாறுமா? பிறவாத பேரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்தான் கிடைக்குமா? இதனையே வள்ளுவரும், ''பிறப்பென்னும் பேதமை நீங்க சிறப்பென்னும் செம்பொருள் காண்ப தறிவு'' என்றார். இவ்வறிவினால் அறியத் தக்கன பிறப்பிற்கு முதற் காரணமான அவிச்சையை நீக்க வேண்டலும், அதனால் இறைவனையடைய முயலலுமாம்.

வாழ்வில் சிறந்த பணியாகக் கருதுவது இறை வழிபாடாகும். அதனைச் செய்யாமல் உண்டும் உடுத்தும் மக்களைப் பெற்றும் இல்வாழ்வில் கிடந்து வருந்துவதற்கா நம்மைப் படைத்தார்? அதற்கா இப் பிறவியைக் கொடுத்திருக்கிறார்? பட்டினத்தடிகளும் உலகத்தைச் சார்ந்த வாழ்வைத்தான் நினைப்பதே யல்லாமல் அம்பலவரின் அடிசார்ந்து நாம் உய்யவேண்டியவைகளை அறியாமல் அல்லவா இருக்கிறார்கள் என்று வருந்துகின்றார். இன்னும் சிவஞான சித்தியாரில், 'மானிடப் பிறவி தானும், வகுத்தது மனம் வாக்கு காயம் ஆனிடத் தைந்தும் ஆடும் அரன்பணிக் காகவன்றோ'' என்று பிறவியின் பயனைக் கூறுகின்றார்.

இனி இப்பிறவியில் செய்யத்தக்கன எவை என்பதைக் கவனிப்போம். இறைவன் திருக்கோயிலுக்குத் தினமும் தவறாமல் செல்ல வேண்டும். அங்கு சென்று தொண்டு செய்து வாழவேண்டுமென அப்பர் பெருமான் வழிகாட்டுகிறார். இறைவன் இருக்குமிடத்தையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இதனையே, ''எம்பெருமான் கோயில்புக்கு புலர் வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டு பூமாலை புனைந்தேத்தி புகழ்ந்து பாடி வரவேண்டும்'' என்கிறார். சமயத்தை வளர்த்த பெரியோர்கள் அனைவரும் ஊர் தோறும் நடந்து நடந்து ஒவ்வொரு திருக்கோயிலும் சென்று எம்பெருமானின் அருள் திறத்தினை வியந்து பாடியிருக்கிறார்கள். அவைகளே தேவார திருவாசகங்களாகிய திருமுறைகள். அவைகளை நாம் தினமும்படித்து வரவேண்டும். அவைகள் நம்மை இறைவனோடு இசைவிக்கும் சக்தியுடையவைகளாகும்.

இவ்வுலக வாழ்வில் மயக்கந் தருவனவாகிய பொருள்கள் பலவுள. நமது மனமும் அவைகளைத்தான் விரும்பிச் செல்லும் இயல்புடையது. ஆகவே மனம்போன போக்கில் விட்டுவிடக் கூடாது. நல்வழிகளில் மனத்தைச் செல்லச் செய்ய நாம் முயற்சிக்க வேண்டும். அவ்வாறு பயின்றால் தீயவற்றிலிருந்து நீங்கி நல்லனவற்றை நம் மனம் பற்றும். நம்முடைய மனம் பளிங்கு போன்றது. சார்ந்த பொருளின் தன்மையாகிவிடும். நம் மனதை நல்வழிப் படுத்துவதற்காகவே தான் திருக்கோயிலும் திருக்கூட்டமும் அமைக்கப்பட்டது. இதனை மணிவாசகப் பெருமான், ''இணங்கத் தன்சீரடியார் கூட்டமும் வைத்தெம்பிரான்'' என்றும் தான் பிறவியாகிய பெருங்கடலை நீந்தத் தன் பேரருள் தந்தருளினார் என்றும் அதோடு துணையற்றவனாகிய என்னை, ''அடியார்கள் தங்கள் அருட்குழாம் புகவிட்டு நல்உறவு செய்தான்'' என்றும் தேனினும் இனிய திருவாசகத்தில் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுள் சந்தா ஆதரவாளர்:

## திரு. S. V. ஈஸ்வரன்

32, டன்ஸ்ரன் இடம்–கொள்ளுப்பிட்டி.

---

## இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, இந்துனேசியா சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

அன்புக்குரிய சந்தாதாரர்களே,

ஒவ்வொரு சந்தாதாரர்களுக்கும் ஆத்மஜோதி இங்கிருந்து அனுப்பப்படுமுன் இருமுறை விலாசம் சரிபிழை பார்க்கப்பட்டுத் தபாலில் சேர்க்கிறோம். அப்படி இருந்தும் ஒரு சிலர் தமக்கு ஒழுங்காகக் கிடைப்பதில்லை என்றும் முறையீடு செய்கின்றனர். அத்துடன் கடந்த தை மாதம் தொடக்கம் முத்திரைச் செலவையும் அரசாங்கத்தார் 1½ மடங்காக அதிகரித்துள்ளனர். இவை இரண்டையும் ஈடுசெய்யுமுகமாக ஒவ்வொரு தேசத்திற்கும் ஒவ்வொரு ஏஜென்சியை நியமித்துள்ளோம். இனிமேல் அவர்களிடமிருந்தே உங்களுக்கு ஆத்மஜோதி கிடைக்கத்தக்கதான ஒழுங்கைச் செய்துள்ளோம். உங்கள் சந்தாவையும் அவர்களிடமே செலுத்தி அவர்களிடமிருந்தே ரசீதையும் பெற்றுக்கொள்க.

**இந்திய விலாசம்:**

S. RAJASEKARAN
'Visalakshi Illam', 274, Royapettah High Road,
Royapettah–Madras-600 014, Tamilnadu
Telephone: 847107

**மலேசியா விலாசம்:**

S. SUBRAMANIYAM
Sri Eswari Flour Mill,
99-L, Jalan Tandok, Kualalumpur, Malaysia.

**இந்துனேசியா விலாசம்:**

SRI MARIYAMMAN KOVIL
Jalan Teuku Umar No: 18,
Medan-Sumatra, Indonesia.

**சிங்கப்பூர் விலாசம்:**

Mrs. M. MAHESWARY THEVI
No. 03 - 3597
Geylang Bahru, Singapore 1233, Tel. 8955229

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered at the G. P. O. as a Newspaper M. L. 359/00.

திருவேற்காடு அருட்கவியரசு

ஸ்ரீதேவி கருமாரிதாசர் அருளிச் செய்த

# தெய்வத் தமிழ் நூல்கள்

| | |
|---|---|
| திருவேற்காடு கருமாரி அம்மன் புராணம் (7001 செய்யுட்கள் கொண்டது) | ரூபா. 100.00 |
| திருவேற்காடு கருமாரி அம்மன் பிள்ளைத் தமிழ் | 3.00 |
| திருவேற்காடு ஸ்ரீ கிருஷ்ண மாரி குறவஞ்சி | 3.00 |
| திருவேற்காடு கருமாரி சதகம் | 3.00 |
| ஆதிசங்கரர் பிள்ளைத் தமிழ் | 3.00 |
| காமாட்சி பிள்ளைத் தமிழ் | 3.00 |
| அருணகிரிநாதர் பிள்ளைத் தமிழ் | 3.00 |
| பாம்பன் சுவாமிகள் பிள்ளைத் தமிழ் | 3.00 |
| ஸ்ரீ ராமாநுஜர் பிள்ளைத் தமிழ் | 3.00 |
| அபிராமி பிள்ளைத் தமிழ் | 3.00 |

(வெளிநாடுகளுக்கு தபால் செலவு தனி)

திருவேற்காடு சுவாமி புகழ் பரப்பும் தெய்வ இதழ்.
இந்து தர்மங்களைப் பரப்பும் அருள்நெறித் தமிழ் ஏடு

## "ஸ்ரீதேவிகருமாரி அம்மன் விஜயம்"

ஆசிரியர்: அருட்கவியரசு ஸ்ரீ தேவி கருமாரிதாசர்

மாதம் இருமுறை. ஆண்டுச் சந்தா ரூபா. 24/-

திருமுருகன் புகழும், செந்தமிழ்க் கலையும் பரப்பும் தெய்வீகத் திங்கள் ஏடு!

அருணகிரி, பாம்பனடிகள் அருள் நூலைப் பரப்பும் ஏடு

## 'குமரகுருமணி' - மாத இதழ் ஆண்டுச் சந்தா - ரூபா. 18/-

152, தம்புச் செட்டித்தெரு,
சென்னை 600 001 — தமிழ்நாடு. தொலைபேசி: 31595

ஆசிரியர் : நா. முத்தையா
அச்சுப்பதிவு : ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம் - நாவலப்பிட்டி
அச்சிட்ட திகதி: 17 - 7 - 82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org